வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu — ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 01.02.2024 வியாழக்கிழமை | இதழ் : 32 | பக்கங்கள் : 12

## கொச்சி - கொழும்பு வரை இயற்கை எரிவாயு குழாய்

### மின் கட்டணத்தை குறைக்க திட்டம்

கொழும்பு, பெப்ரவரி 01

**இலங்கையில் மின்சார கட்டணத்தை குறைக்க கொச்சியிலிருந்து கொழும்பு வரை திரவ இயற்கை எரிவாயு குழாய் அமைக்கும் பணியை இந்தியா மேற்கொண்டு வருவதாக இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.**



இந்தியாவின் 75ஆவது குடியரசு தினத்தையொட்டி, இந்தியா ஹவுஸில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் அவர் இந்த விடயத்தை கூறினார்.

இந்தியாவுக்கு மின்சாரம் ஏற்றுமதி செய்வதற்கு இலங்கையைத் தயார்படுத்த மின் கட்டண இணைப்பு செயல் திட்டம் மேற்கொள்ளப்படும் அதேநேரம், இலங்கையில் மின்சார செலவைக் குறைக்க கொச்சியிலிருந்து கொழும்பு வரை எல். என். ஜி. குழாய்களை அமைப்பதற்கும் இந்தியா பணியாற்றி வருவதாக சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

இந்தியா - இலங்கை இணைப்பு வழித்தடத்தை அமைப்பதற்கான வழிமுறைகளை உருவாக்குவதில் இந்தியா பணியாற்றி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் மிகப் பெரிய வர்த்தகப் பங்காளியாக இந்தியா இருப்பதாகவும் அண்மைய ஆண்டுகளில் இலங்கையில் மிகப்பெரிய வெளிநாட்டு முதலீட்டாளராகவும் இந்தியா இருந்து வருவதாகவும் சந்தோஷ் ஜா கூறினார்.

இந்த நிலையில் பாதுகாப்பு விவகாரங்களில் இலங்கையின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் இந்தியா எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

## எரிபொருட்களின் விலைகள் உயர்வு

கொழும்பு, பெப். 01

நள்ளிரவு முதல் எரிபொருட்களின் விலைகளை அதிகரித்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இதன்படி, 92 ஒக்ரைன் ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை ஐந்து ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 371 ரூபாயாகும்.

95 ஒக்ரைன் ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை எட்டு ரூபாயால்

11

## மக்களைக் காப்பாற்ற இது இறுதி சந்தர்ப்பம்

### அமைச்சர் மனுஷ கூறுகிறார்

கொழும்பு, பெப். 01

நாட்டைக் காப்பாற்றுவதற்கான இறுதிச் சந்தர்ப்பம் இதுவே என அரசியல் கட்சித் தலைவர்கள் தொடர்ந்து கூறிவந்தாலும், மக்களைக் காப்பாற்றுவதற்கான இறுதிச் சந்தர்ப்பமே இதுவென

11

## கடவுச் சீட்டு கட்டணங்கள் 100 வீதம் உயர்வு

கொழும்பு, பெப். 01

கடவுச்சீட்டு வழங்கும் போது பொது சேவைகளுக்கான கட்டணம் இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் 100 வீதம் அதிகரிக்கப்படவுள்ளது.

குடிவரவு திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 5,000 ரூபாய் கட்டணம் 10,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும், கட்டண உயர்வு ஒன்லைன் மற்றும் ஒன்லைன் அல்லாத சேவைகளுக்கு செல்லுபடியாகும் என்றும் அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## போதையால் இளைஞன் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், பெப். 01

அதிக ஹெரோயின் பாவனை காரணமாக யாழ்ப்பாணத்தில் இளைஞரொருவர் நேற்று உயிரிழந்தார்.

இருபாலை தெற்கு பகுதியைச் சேர்ந்த சுணேசன் நிஷாந் (வயது 29) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த நபர் நேற்று முன் தினம் உணவருந்தி விட்டு தூக்கத் திற்கு சென்றுள்ளார்.

11

## போராட்டங்களை ஒடுக்கும் நிதியை கல்விக்காக ஒதுக்கீடு செய்யுங்கள்!

### சஜித் பிரேமதாஸ கோரிக்கை



கொழும்பு, பெப். 01

போராட்டங்களை ஒடுக்குவதற்காக பயன்படுத்தப்படுகின்ற கண்ணீர் புகை குண்டுகள் மற்றும் இறப்பர் தோட்டாக்களுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதியை நாட்டின் கல்விக்காக ஒதுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸஅரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தள்ளார்.

நேற்று மாத்தறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அதன்படி ஐக்கிய மக்கள்

11

## தொழில்நுட்ப யுகத்திற்கேற்ப கல்வி முறையில் மாற்றங்கள்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.01

அறிவு மற்றும் பண்பு மிக்க சமூகத்தின் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்ப யுகத்தின் தேவைக்கேற்ப இலங்கையில் கல்வி முறையை வலுப்படுத்துவோம் எனவும் அவர் கூறினார்.

களனி பல்கலைக்கழகத்தின் பாலி மற்றும் பௌத்த பட்டப் படிப்பு பிரிவின் புதிய கட்டடத்தை நேற்று திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி

11

## தமிழ் அரசு தேசிய மாநாட்டை மிகவிரைவில் நடத்துங்கள்!

### சிறீதரனுக்கு சுமந்திரன் கடிதம்

கொழும்பு, பெப். 01

“எமது வரலாற்றில் முதன்முறையாக வாக்கெடுப்பினாலே தெரிவு செய்யப்பட்ட தலைவராகிய நீங்கள் அப்படியான அதற்குகந்த விமர்சையோடு வைபவ ரீதியாக பதவியேற்பது முக்கியமான விடயமாகும். எமது மக்கள் மத்தியில் எழுந்திருக்கும் பல்வேறு சந்தேகங்களுக்கும் விமர்சனங்களுக்கும் அது முற்றுப்புள்ளி வைக்கும். ஆகவே, தயவு செய்து காலம் தாழ்த்தாது வெகு விரைவில் அந்த பகிரங்க பொது நிகழ்வை நடத்துமாறு அன்புரிமையோடு நான் கேட்டுக் கொள்கின்றேன் - இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம் சிறீதரன் என்று குறிப்பிட்டு அவருக்குக் கடிதம் எழுதியிருக்கின்றார் கட்சியின் முன்னாள் பிரதிப் பொதுச் செயலாளர் ம. ஆ. சுமந்திரன்.

அந்தக் கடிதத்தில் பல்வேறு

11

## வெற்றிப் பாதைக்கு நாட்டை நாம் கொண்டுசெல்வோம்



கொழும்பு, பெப். 01

எதிர்வரும் பொதுத் தேர்தலை சிறிலங்கா பொதுஜன பெரமுன மிகவும் வலுவாக எதிர்கொண்டு நாட்டை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

11

## பெப்ரவரி 04ஆம் திகதி தமிழர் தேசத்தின் கரிநாள்

### பேரணிக்கும் யாழ். பல்கலை மாணவர் அழைப்பு

யாழ்ப்பாணம், பெப். 01

இலங்கையின் சுதந்திர தினத்தை கறுப்பு நாளாக அனுஷ்டிப்பதுடன், அன்றைய தினம் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ள மாபெரும் கண்டனப் பேரணியில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக அவர்கள் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பிரித்தானிய காலனித்துவத்தின் பிடியிலிருந்து இலங்கை சுதந்திரம் அடைந்த நாள் தமிழ்த் தேசிய இனம் திறந்தவெளி சிறையில் இடப்பட்ட நாள். ஒட்டுமொத்த நாட்டினுடைய இறைமை, ஆட்சியதிகாரம் அனைத்தும் தனித்தே சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் கைகளிலே ஒப்படைக்கப்பட்டமை என்பது தமிழினம் மீதான தொடர்ச்சியான இன ஒடுக்குமுறைகளுக்கே வழிகோலியது என்பதோடு, 2009 ஆண்டு இனப்படுகொலை எனும் கோரமுகமாய் வெளிப்பட்டதென்பது யாவரும் அறிந்ததொன்றே.

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# பாலம் அருகே சிசுவின் சடலம்

கொழும்பு, பெப். 01
ராஜகிரிய - மதின்னாகொட பாலத்திற்கு அருகில் சிசு ஒன்றின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
சடலம் நேற்றுக் காலை கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.
சடலம் இருந்த இடத்தில் நிறுத்தப்பட்டிருந்த காரில் இரத்தக் கறைகள் காணப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டது.

# அரசியலில் இருந்து ஓய்வு பெற தயாராகும் ரொஷான் ரணசிங்க

கொழும்பு, பெப். 01
65 வயதுக்கு முன்னர் அரசியலை விட்டு விலகி, நாட்டுக்கு புதிய முன்னுதாரணமாக விளங்கத் தயார் என பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.
மேலும், அரச சேவையில் ஓய்வு பெறுவதற்கான வயதெல்லை இருப்பது போல், அரசியலுக்கும் அது நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.
நுகேகொடை பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்-
என்றாவது ஒரு நாள் என் கண் பார்வை குறையும் - செவித்திறன் குறையும். அதுதான் நிதர்சனம்.
அரசுப் பணியில் இருந்து 60 வயதில் ஓய்வு பெறுவது ஏன்? நீதிபதியும் 65 ஆண்டுகள் பணியாற்றலாம். கடந்தகால வரலாற்றில் ஓர் ஆளுநருக்கு 80 வயது இருக்கும்போது, அவருக்கு பணிபுரியும் மன உறுதி உள்ளதா? எனது அரசியல் வாழ்க்கையில் நாங்கள் முன்னுதாரணமாக இருக்கிறோம்.
65 ஆண்டுகளுக்கு முன் அரசியலில் இருந்து ஓய்வு பெற தயாராக இருக்கிறோம். இங்கே எல்லோரும் அப்படித்தான். அதற்கு முன்னுதாரணமாக இருக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்-என்றார். (அ)

# கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு அமைச்சுகளுக்கு புதிய வாகனம்!

கொழும்பு, பெப். 01
துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு, சுகாதார அமைச்சு, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு, கல்வி அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கான வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
அந்நியச் செலாவணி சந்தையில் ஏற்பட்டுள்ள அழுத்தத்தைக் குறைக்கும் நடவடிக்கையாக, கட்டுமான வாகனங்கள் மற்றும் அம்புலன்ஸ்கள் தவிர்ந்த வாகனங்களின் இறக்குமதியை அரசாங்கம் தற்காலிகமாக இடைநிறுத்தியது.
இந்த நிலையில், துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு ஆகியன நிதி அமைச்சிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்க கடந்த டிசெம்பர் மாதம் அமைச்சரவை தீர்மானித்து.
இதற்கமைய, 2366/19 இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தல் கடந்த 11 ஆம் திகதி வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மாணவனுக்கு ஆபாசப் படங்களை அனுப்பிய ஆசிரிய ஆலோசகர் கைது

கொழும்பு, பெப். 01
பாடசாலை மாணவர் ஒருவரின் வட்ஸ் அப் இலக்கத்துக்கு ஆபாசப் படங்களை அனுப்பி வைத்து மாணவரை பாலியல் ரீதியான குற்றங்களில் ஈடுபடுத்த முயன்ற விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
இவ்வாறு கைது செய்யப்பட்டவர் எல்பிலிபிட்டி பிரதேசத்தை சேர்ந்த 55 வயதுடைய விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகராவார்.
இவர் இரத்தினபுரி - கொலன்ன பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் 11 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் மாணவர் ஒருவரின் வட்ஸ் அப் இலக்கத்துக்கு ஆபாசப் படங்களை அனுப்பி வைத்து மாணவரின் ஆபாசப் படங்களையும் தனக்கு அனுப்பி வைக்குமாறு கூறியுள்ளார்.
குறித்த மாணவன் இது தொடர்பில் ஊழல் தடுப்புப் பிரிவின் இரத்தினபுரி மாவட்ட அதிகாரி ஒருவரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.
பின்னர் அந்த அதிகாரி இது தொடர்பில் சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக தடுப்புப் பிரிவில் முறைப்பாடு வழங்கியுள்ளார்.
இதனையடுத்து சந்தேக நபர் எல்பிலிபிட்டி பொலிஸார் மற்றும் கொலன்ன சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
கைது செய்யப்பட்ட சந்தேக நபர் எல்பிலிபிட்டி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# ரெலிக்கொம் பங்கு கொள்வனவு செய்ய சீன மற்றும் இந்திய நிறுவனங்கள் தகுதி

கொழும்பு, பெப். 01
சிறீ லங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் பெரும்பான்மை பங்குகளை பெறுவதற்கு சீன மற்றும் இந்திய நிறுவனங்கள் தகுதி பெற்றுள்ளதாக நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சு அறிவித்துள்ளது.
இதன்படி, இந்தியாவின் ஜியோ பிளாட்போர்ம்ஸ் மற்றும் சீனாவின் கோட்யூன் இன்ரர்நஷனல் இன்வெஸ்ட்மென்ட் ஹோல்டிங்ஸ் ஆகிய நிறுவனங்களே இவ்வாறு தகுதி பெற்றுள்ளன.
சிறீ லங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் அரசாங்கத்துக்கு சொந்தமான 50.23 வீத பங்குகளை விற்பனை செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.
இந்தியாவின் ஜியோ பிளாட்போர்ம்ஸ் மற்றும் சீனாவின் கோட்யூன் இன்ரர்நஷனல் இன்வெஸ்ட்மென்ட் ஹோல்டிங்ஸ் மற்றும் லைக்கா குழுமத்தின் பெட்டிகோ கொமர்சியோ இன்ரர்நஷனல் ஆகிய நிறுவனங்கள் ரெலிக்கொம் நிறுவனத்தின் பெரும்பான்மையான பங்குகளை கொள்வனவு செய்வதற்கு முன்வந்தன.
இதன்படி, நிதி அமைச்சின் சிறப்பு திட்டக் குழு மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட சிறப்பு கலந்துரையாடல் குழு ஆகியன ரெலிக்கொம் நிறுவனத்தை கொள்வனவு செய்வதற்கான முன் தகுதி பெற்ற போட்டி நிறுவனங்களாக ஜியோ பிளாட்பார்ம்ஸ் மற்றும் கோட்யூன் இன்ரர்நேஷனல் இன்வெஸ்ட்மென்ட் ஹோல்டிங்ஸ் ஆகியவற்றை தெரிவு செய்துள்ளன.
இதனிடையே, உலக வங்கியுடன் இணைந்த சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம், இலங்கை ரெலிக்கொம் நிறுவனத்தில் அரசாங்கத்திற்கு சொந்தமான பங்குகளை விற்பனை செய்வதற்கான விசேட ஆலோசனை அமைப்பாக செயல்படுகின்றது. (அ)

# இலங்கையில் கால் பதிக்கும் பில் கேட்ஸ் அறக்கட்டளை

உலகின் மிகப் பெரிய தொண்டு நிறுவனங்களில் ஒன்றான பில் அண்ட் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை இலங்கையில் சில திட்டங்களுக்கு ஒத்துழைப்புகளை வழங்குவதற்கு இணக்கம் வெளியிட்டுள்ளது.
சர்வதேச நாணய நிதியத்தின் விரிவான நிதியளிப்பு வசதி, உலக வங்கியின் அபிவிருத்திக் கொள்கை செயல்பாட்டுத் திட்டம், ஆசிய அபிவிருத்தி வங்கியின் கொள்கை உதவித் திட்டங்கள் உட்பட பன்னாட்டு தனியார் மற்றும் அரச நிறுவனங்களின் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது தேவையான உதவிகளை வழங்கும் நோக்கில் இந்த ஒத்துழைப்புகளை பில் அண்ட் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை வழங்கவுள்ளது.
ஜனாதிபதி செயலகத்தில் உதவித் திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் விசேட பிரிவை பில் அண்ட் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை ஆரம்பிக்க உள்ளதுடன், பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையால் நிறுவப்பட்ட ஒரு சர்வதேச அமைப்பான குளோபல் ஹெல்த் ஸ்ட்ராடஜீஸ் மற்றும் அதன் உள்ளூர் பங்குதாரர் கனெக்ட்டு கேர் அமைப்பு, இந்த உதவியளிக்கும் பிரிவை ஆரம்பிப்பதற்கான பங்களிப்பை வழங்க ஜனாதிபதி செயலகத்துடன் இணைந்து செயல்படவுள்ளது.
திட்டங்களைச் சரியாகச் செயல்படுத்துவதற்கும் சரியான ஒருங்கிணைப்பை உறுதி செய்யவும் மூத்த அதிகாரிகளை கொண்ட நிர்வாகக் குழுவை நியமிக்கவும் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.
இதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று அமைச்சரவையில் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரமும் வழங்கப்பட்டுள்ளது.

# தடுப்பு காவலில் இளைஞர் மரணம்

கொழும்பு, பெப். 01
பொலிஸ் காவலில் இருந்த இளைஞரின் மரணத்தில் பொலிஸாருக்கு தொடர்பு இருப்பதாக அவரது குடும்பத்தினர் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.
22 வயதுடைய சந்தேக நபரான ஷனுக கிஹான் மரம்பகே, இரண்டு பெண் சந்தேக நபர்களுடன் போதைப் பொருள் தொடர்பான குற்றம் ஒன்றுக்காக கடந்த நேற்று முன்தினம் கைதானார்.
சிறிது நேரத்தில் மரம்பகே சுகவீனமடைந்து, அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் இறந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
உயிரிழந்தவரின் உறவினர்கள் அவரின் மரணம் தொடர்பில் சந்தேகம் எழுப்பினர்.
இதனால், பிரதேச மக்கள் நேற்று முன்தினம் இரவு அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தை சுற்றி வளைத்தனர். (அ)

# இசைமாலைத்தாழ்வு கிராம மக்கள் காணி வழங்கக் கோரி போராட்டம்



மன்னார், பெப். 01
நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கொம்பன் சாய்ந்த குளம் பகுதியில் உள்ள காணியை உடனடியாக கிராமத்தில் இசைமாலைத்தாழ்வு காணி இல்லாத மக்களுக்கு பகிர்ந்தளித்து வழங்குமாறு கோரி இசைமாளத்தாழ்வு கிராம மக்கள் நேற்று புதன்கிழமை காலை கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.
குறித்த போராட்டம் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கொம்பன் சாய்ந்த குளம் பகுதியில் இடம்பெற்றது.
குறித்த 46 ஏக்கர் காணியானது வன வள திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நிலையில் குறித்த காணியை விடுவித்து நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இசைமாலைத்தாழ்வு கிராமத்திற்குட்பட்ட 113 குடும்பங்களுக்கு பகிர்ந்தழிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.
குறித்த பகுதியில் பிறிதொரு கிராமத்தைச் சேர்ந்த இருவர் அத்துமீறி நுழைந்து பல ஏக்கர் காணிகளை அடாத்தாக பிடித்து வருகின்றனர்.
எனவே குறித்த காணியை அவர்களிடம் இருந்து மீட்டு சுமார் 46 ஏக்கர் காணியையும் இசைமாலைத்தாழ்வு கிராம மக்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை முன்னெடுக்கப்படவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது. (அ)

Eelanadu
01.02.2024 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், தை 18

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மனோ கணேசனின் சவால்

தாம் நினைத்திருந்தால் - ரணில் அதிகாரத்துக்கு வந்த மறுதினமே அமைச்சரவையில் இடம்பெற்றிருக்கலாம் - ஆனால், நாங்கள் அவ்வாறு செய்யவில்லை. ஏனெனில், பேரினவாதம், ஊழல் ஆகிய இரண்டினதும், ஏகபோக பேர்வழிகளான ராஜபக்ஷ ஆதரவு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் அரசியல்வாதிகள் கடந்த நான்கு வருடங்களில் சாதித்ததை பட்டியலிட முடியுமா என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் சவால் விடுத்திருக்கின்றார். அவர் எந்தத் தமிழ் அரசியல்வாதிகளை குறிப்பிடுகின்றார் என்பது தெளிவாக இல்லையென்றாலும்கூட, அவரின் கூற்று டக்ளஸ் தேவானந்தா, சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் வியாழேந்திரன் ஆகியோருக்கும் பொருத்தமானது.

குறிப்பாக டக்ளஸ் தேவானந்தா தமிழ்த் தேசியவாத அரசியல் வாதிகளை நோக்கி அவ்வப்போது கேள்வி எழுப்புவதுண்டு - தன்னுடைய அரசியல் நிலைப்பாட்டையே கூட்டமைப்பினரும் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர் எனக் கூறுவதுண்டு - அதாவது, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்கீழ் கிடைக்கப்பெற்ற 13ஆவது திருத்தச் சட்டத்தை பயன்படுத்த வேண்டுமென்று தான் இதுவரை கூறிவந்ததையே இப்போது தமிழ்த் தேசியக் கட்சிகளும் கூறமுற்படுகின்றன என்பதுதான் டக்ளஸின் வாதம்.

இந்த விடயத்தில் தமிழ்த் தேசிய கட்சிகள் என்போர் விடயங்களை சரியாகக் கையாளவில்லை என்னும் விமர்சனம் பலராலும் முன்வைக்கப்படுவதில் நியாயமுண்டு. குறிப்பாக, 2015இல் ஆட்சிமாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து முற்றிலும் சாதகமான சூழல் நிலவியது உண்மை. அந்த சந்தர்ப்பத்தை முறையாகக் கையாளும் பொறுப்பை சம்பந்தன் தவறவிட்டார். இந்த விடயம் தொடர்பில் 'ஈழநாடு' பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டியிருக்கின்றது. ஆனால்,அதற்காக டக்ளஸ் தேவானந்தா விடயங்களை சாதித்துவிட்டார் என்பது பொருளல்ல.

டக்ளஸ் தேவானந்தா மட்டுமல்ல அமைச்சரவையில் இடம்பெறும் சந்திரகாந்தன் (பிள்ளையான்) வியாழேந்திரன் போன்றோர் தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் தாங்கள் அங்கம் வகிக்கும் அரசாங்கத்தின் மீது எவ்வாறான அழுத்தங்களைப் பிரயோகித்திருக்கின்றனர்? தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் - அதாவது, அரசமைப்பில் இருக்கின்ற விடயங்களை முழுமையாக நடைமுறைப்படுத்தும் விடயங்களில் எவ்வாறான முன்னேற்றங்களை காண்பித்திருக்கின்றனர்?

டக்ளஸ் தேவானந்தா தொடர்ந்தும் அமைச்சரவையில் இடம்பெற்று வருகின்றார். மகிந்த ராஜபக்ஷ 13 பிளஸ் தொடர்பில் பேசினார். அந்தக் காலத்தில் அமைச்சரவையில் இருந்த டக்ளஸ் தேவானந்தா மகிந்த குறிப்பிட்ட 13 பிளஸ் வாக்குறுதியை நிறைவேற்றுவதில் எவ்வாறான அழுத்தங்களை பிரயோகிக்க முடிந்தது?

வெறுமனே அமைச்சரவையில் இடம்பெறுவதன் மூலம் மற்றவர்கள் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்துவிட முடியாது. தங்களுடைய அரசியல் நகர்வுகளில் முன்னேற்றங்களைக் காண்பிக்க வேண்டும். அப்போதுதான், மற்றவர்கள்மீது குற்றஞ்சாட்டுவதற்கான தகுதியைப் பெறமுடியும். தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்று வருகின்றபோது அரசாங்கத்தில் அங்கம் வகிப்போர் வெறுமனே பார்வையாளர்களாகி விடுகின்றனர். அவர்களுக்கு எந்தவொரு முக்கியத்துவமும் இல்லை. ஏனெனில், அவர்கள் முழுமையாக சரணாகதி அரசியலுக்குள் இருக்கின்றனர். இந்தப் பின்புலத்தில்தான் வடக்கு - கிழக்கில் தமிழ் உரிமை வாதத்தை முன்னிலைப்படுத்தும் பலமானதோர் அரசியல் ஏன் தேவை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

# நிஷாந்தவின் வாகனத்தில் மோதிய கார் யாருடையது?

## பல கோணங்களில் பொலிஸார் விசாரணை

*கொழும்பு, பெப். 01*

நெடுஞ்சாலையில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மரணம் சமூக வலைத்தளங்களில் மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சனத் நிஷாந்தவின் மரணம் கொலையாக இருக்க வாய்ப்புள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸகுட்டி ஆராச்சி அண்மையில் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் கடந்த 25 ஆம் திகதி அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த உள்ளிட்ட இருவர் உயிரிழந்தனர்.

இவரின் மரணம் அரசியல் வட்டாரத்தில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது. மேலும், சமூக வலைதளங்களிலும் பல விமர்சனங்கள் பேசப்பட்டன.

இவருடைய மரணம் தொடர்பில் பல்வேறு கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதையடுத்து தற்போது ஒரு புதிய விடயம் புலனாகியுள்ளது.

அதாவது, சனத் நிஷாந்தவின் ஜீப் வண்டி விபத்துக்குள்ளான போது அவரின் காரை பிறிதொரு கார், முந்திச்செல்ல முற்பட்டதாகவும் அதனால்தான் குறித்த விபத்து இடம்பெற்றதாகவும் பொலிஸார் தற்போது தகவல் வெளியிட்டுள்ளனர்.

முன்னதாக பாரவூர்தியுடன் ஜீப் வண்டி மோதுண்டதால் விபத்து ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது.

தற்போது விபத்து ஏற்படுவதற்கு காரணம் என சந்தேகிக்கப்படும் கார் குறித்தும் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறித்த விபத்தில் இராஜாங்க அமைச்சரின் ஜீப் வண்டியுடன் மோதிய பாரவூர்தியின் சாரதி தெரிவித்ததன் அடிப்படையில், தான் ஒரு காரை பார்த்ததாகவும் அந்த கார் சுமார் 140 கிலோமீற்றர் வேகத்தில் சென்றிருக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஜீப் வண்டியும் அடையாளம் காணப்படாத அந்த காரும் போட்டித்தன்மையில் வந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# தேசிய கொடியை அவமதித்தால் கடும் நடவடிக்கை

*கொழும்பு, பெப். 01*

தேசிய கொடியை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த தகவலை பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் வெளியிட்டுள்ளார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பு காலிமுகத்திடல் வீதி முழுமையாக மூடப்படவுள்ளது.

இதன்படி எதிர்வரும் பெப்ரவரி 3 ஆம் திகதி பகல் 2 மணி முதல் 4 ஆம் திகதி பகல் 12 மணி வரை குறித்த வீதி முழுமையாக மூடப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு தேசிய கொடியை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அவற்றை கண்காணிப்பதற்கு தனி குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் தேசபந்து தென்னக்கோன் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# சிங்கப்பூருடனான வர்த்தகத்தை விரிவாக்கம் செய்யும் இலங்கை!

*கொழும்பு, பெப். 01*

சிங்கப்பூருடன் விரிவான வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியான பேச்சுகளை நடத்தி வருகின்றது.

கடந்த ஒக்ரோபர் மாதம் ஜனாதிபதி செயலகம் வெளியிட்டிருந்த அறிக்கையில் சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை விரிவுபடுத்துவது குறித்தும் தெரிவித்திருந்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிங்கப்பூருக்கு மேற்கொண்டிருந்த பயணத்தின் போதும் வர்த்தக ஒப்பந்தங்கள் தொடர்பில் பேச்சுகளை நடத்தியிருந்தார்.


இதன் அடுத்த கட்டமாக கொழும்பில் அமைச்சர் நளின் பெர்ணான்டோ, இலங்கைக்கான சிங்கப்பூர் தூதுவர் எஸ்.சந்திர தாஸுடன் கலந்துரையாடியுள்ளார். இதன்போது இரு நாட்டு வர்த்தக ஒப்பந்தங்களை விரிவாக்குவது குறித்து ஆலோசித்துள்ளனர்.

வர்த்தக அமைச்சில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில், உணவுப் பாதுகாப்பை அதிகரிப்பதன் ஊடாக இலங்கை சாதகமான முன்னேற்றத்தை அடைய முடியும் எனத் தெரிவித்த சிங்கப்பூர் தூதுவர், அதற்கான முறையான கட்டமைப்பை உருவாக்குவதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

இலங்கைக்கு சிங்கப்பூரின் முதலீடுகளை ஈர்க்கும் சாத்தியம் குறித்து வர்த்தக அமைச்சர் பெர்னாண்டோ கேட்டறிந்ததுடன், இலங்கையில் அறுவடைக்குப் பின்னரான சேதங்கள் மிக அதிகமாக காணப்படுவதால் அதன் செலவை நுகர்வோரே ஏற்க வேண்டியுள்ளது. இதில் இருந்து பாதுகாக்கும் புதிய தொழில்நுட்ப அறிவைப் பெறுவது அவசியம். அதற்கான ஒத்துழைப்புகளையும் அமைச்சர் கோரினார்.

இலங்கைக்கு பல்வேறு விடயங்களில் சிங்கப்பூர் ஒத்துழைப்பு வழங்கும் என தூதுவர் இதன்போது உறுதியளித்துள்ளார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**பெப்ரவரி - 01 வியாழக்கிழமை**
**சோபகிருது வருடம் - தை 18**
**நல்ல நேரம் : 10.30 - 12.00**
**ராகு காலம் : 01.30 - 03.00**
**திதி : சப்தமி**



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள். அமோகமான நாள்.

**இடபம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக் கும். கனவு நனவாகும் நாள்.

**மிதுனம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். புது வேலை கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். சக ஊழியர்கள் உதவுவார்கள் எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**கடகம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். நினைத்ததை முடிக்கும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தடைகள் உடைபடும் நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்துசெல்லும். தலைசுற்றல்முழங்கால்வலிவந்து நீங்கும். ஊழியர்களுடன் பனிப்போர் நீங்கும். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டும்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வந்து நீங்கும். எதிலும் கவனம் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள். சிறப்பானநாள்.

**தனுசு**
உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். இழந்த உரிமையை பெறுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். எதிர்ப்புகளை சமாளிக்கவேண்டி இருக்கும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**மீனம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். விலை உயர்ந்த மின்னணு மின்சார பொருட்கள் வாங்குவீர்கள் வீடு, உத்தியோகத்தில்மேலதிகாரி மதிப்பார். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

# இந்து அல்லாதவர்கள் கோயிலில் கொடிமரம் கடந்து செல்ல முடியாது

## மதுரை உயர் நீதிமன்று தீர்ப்பு

மதுரை, பெப். 01

இந்து அல்லாதவர்கள் மற்றும் இந்து மத கடவுள் மீது நம்பிக்கை அல்லாதவர்கள் பழனி கோயில் கொடிமரம் தாண்டி உள்ளே அனுமதிக்கக்கூடாது என்று சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை தீர்ப்பு வழங்கியுள்ளது.

இந்து அறநிலையத்துறை ஆலய நுழைவு விதி, 1947ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டத்தில், இந்து அல்லாத எந்த ஒரு சமயத்தினரும் இந்து கோயிலுக்குள் நுழைவதை தடுக்கின்றது என்று கூறி, பழநியைச் சேர்ந்த ஒருவர் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக்கிளையில் மனுதாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி சிறீமதி, "இந்து அல்லாதவர்களை கோயிலின் கொடிமரம் தாண்டி உள்ளே அனுமதிக்கக் கூடாது. 'இந்து அல்லாதவர்கள் மற்றும் இந்து கடவுள் மீது நம்பிக்கை இல்லாதவர்கள் கோயிலுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது' என்ற பதாகையை கோயிலில் பல்வேறு இடங்களில் வைக்க வேண்டும்" என உத்தரவிட்டுள்ளார்.

மேலும் "மாற்று மதத்தைச் சார்ந்தவர்கள் கோயிலுக்குள் சாமி தரிசனம் செய்ய விரும்பினால் கோயிலில் இதற்காக ஒரு பதிவேடு வைக்க வேண்டும். அந்தப் பதிவேட்டில், இந்த சுவாமியின் மீது நம்பிக்கை கொண்டு தரிசனம் செய்ய வருகிறேன் என உத்தரவாத உறுதிமொழி எழுதிக் கொடுத்த பின்பு கோயிலுக்குள் அனுமதிக்கலாம்" என்று உத்தரவிட்ட நீதிபதி, "இந்து அறநிலையத்துறை ஆணையர் கோயிலின் ஆகம விதிகளை முறையாக பின்பற்ற வேண்டும்" எனவும் உத்தரவு பிறப்பித்துள்ளார். (ஐ)

# ஒரே நாடு, ஒரே தேர்தலால் தேசிய கட்சிகளுக்கு மட்டுமே சாதகநிலை

## அன்புமணி ராமதாஸ் கருத்து

விழுப்புரம், பெப். 01

"ஒரே நாடு ஒரே தேர்தல் நடந்தால் தேசிய கட்சிகளுக்கு மட்டுமே சாதகமாக இருக்கும்" என்று பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று செய்தியாளர்களிடம் கூறியது,

மக்களவை தேர்தல் குறித்து எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை. ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பது குறித்து என் கருத்து என்னவென்றால் 1952, 57, 62, 67 வரை முழுமையாக ஆட்சிகள் நடைபெற்றன. அதன்பின் பாதியில் 356 பிரிவை பயன்படுத்தி ஆட்சி கலைக்கப்பட்டது. எங்கள் கேள்விகள், அச்சங்கள் என்னவென்றால், பெரும்பான்மை இல்லாத நிலையில் மத்திய அரசு ஒரே ஆண்டில் கலைந்தால் அடுத்த 4 ஆண்டுகள் என்ன செய்வது?. 4 ஆண்டுகள் கழித்து தேர்தல் வருமா? அல்லது அப்போதே தேர்தல் வருமா?. மத்திய அரசு கலைந்தது போல மாநிலங்களுக்கும் தேர்தல் நடத்தப்பட வேண்டுமா? மாநில அரசு கலைக்கப் பட்டால் மீண்டும் தேர்தல் வந்தால் இடைப்பட்ட காலகட் டத்திற்கு மட்டும்தான் தேர்வு செய்யப்பட்ட அரசு பதவி வகிக்குமா? இது போன்ற பல சந்தேகங்கள் உள்ளன.

இதேநேரம் மத்திய அரசுக்கு எங்களின் யோசனைகளை சொல்லியுள்ளோம். உலகின் 80 நாடுகளில் முன்மொழிவு பிரதிநிதித்துவம் உள்ளது. அதில் வேட்பாளர்களுக்கு வாக்களிக்கமாட்டார்கள். கட்சிகளுக்குதான் வாக்களிப்பார்கள். இதனால் கட்சி தாவமுடியாது. உறுப்பினர்களை கட்சிதான் முடிவு செய்யும். அனைத்து கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் இருக்கும். இந்த யோசனையை பல ஆண்டுகளுக்கு முன்பே பா.



ம. க. நிறுவுநர் ராமதாஸ் கூறியுள்ளார். இதனை பா. ம. க. மட்டுமே சொல்லிவருகிறது. ஒரே நேரத்தில் மத்தியிலும், மாநிலத்திலும் தேர்தல் வைத்தால் மத்திய பிரச்னைகள் முன்னிலைப்படுத்தப்பட்டு, மாநில பிரச்னைகள் பின் தள்ளப்படும்.

இது தேசிய கட்சிகளுக்கு மட்டுமே சாதகமாக இருக்கும். மத்தியில் தேர்தல் வைத்தால் அடுத்த இரண்டரை ஆண்டுகளில் மாநிலங்களுக்கு தேர்தல் வைக்கவேண்டும். இப்படி வைத்தால் தொடர்ந்து இரண்டரை ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் வரும் - என்றார்.

# தமிழகத்தில் அரச பாடசாலைகளை தி. மு. க அரசு மூடி வருகின்றது

சென்னை, பெப். 01

தமிழகத்தில் அரசுப் பள்ளிகளை திமுக அரசு மூடி வருவதாக தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டினார்.

திருவண்ணாமலையில் நேற்று ஹஎன் மண், என் மக்கள்' யாத்திரை மேற்கொண்ட அண்ணாமலை, பொதுமக்கள் மத்தியில் பேசியவை வருமாறு

தமிழகத்தில் இளைஞர்களின் படிப்புக்கு ஏற்ற வேலை கிடைப்பதில்லை. அதேபோல, வேலைக்கு ஏற்ற ஊதியமும் இல்லை. தண்ணீரின்றி விவசாயம் பொய்த்துப்போனது. நீராதாரத்தைப் பெருக்க தி. மு. க. அரசு முயற்சிக்கவில்லை. லஞ்சம், ஊழல், குடும்ப ஆட்சி மற்றும் அடாவடியை அகற்றுவதே இந்த யாத்திரையின் நோக்கம்.



தமிழகத்தில் தரமான கல்வி கிடைப்பதில்லை. அரசுப் பள்ளிகளில் தரம் இல்லாமல் உள்ளன.தனியார் பள்ளிகளில் உள்ள கட்டமைப்பு வசதிகள், அரசுப் பள்ளிகளில் இல்லை. அரசுப் பள்ளிகளுக்கு தி. மு. க. அரசு மூடுவிழா நடத்துகிறது. அரசுப் பள்ளிகளில் 11 ஆயிரம் வகுப்பறைகள் பற்றாக்குறையாக உள்ளன என புள்ளி விவரம் தெரிவிக்கிறது.

உலகத் தரம் வாய்ந்த கல்வியை பிரதமர் மோடி கொடுக்கிறார். இந்தியா முழுவதும் நவோதயா பள்ளிகள் உள்ள நிலையில், தமிழகத்தில் ஒரு நவோதயா பள்ளிகூட இல்லை. நவோதயா பள்ளி வரவிடாமல் தி. மு. க. அரசு தடுக்கிறது - என்றார்.

# பாவத்தில் எமக்கு பங்கு வேண்டாம்!

## புதிய கூட்டணி குறித்து மனோ



**கொழும்பு, பெப். 01**

**“ராஜபக்ஷர்களின் அட்டூழியங்களை மன்னிக்க நாம் தயார் இல்லை. ஆகவே ஒரு கையால் ராஜபக்ஷர்களை கட்டி அணைத்தப்படி மறுகையால் எம்மை சுட்டி அழைக்க வேண்டாம். நாம் இன்று இருக்கும் இடத்தில் சௌக்கிய மாக இருக்கிறோம். கோட்டாபய ராஜபக்ஷ போனாலும், அவரது பாவத்தின் நிழல் போகவில்லை. சட்டப்படி கோட்டாபய ராஜபக்ஷ 16ஆம் திகதி நவம்பர் 2019 தேர்தலில் பெற்ற மக்கள் ஆணையுடன்தான் இந்த அரசு நடக்கிறது. அந்த பாவத்தில் எமக்கு பங்கு வேண்டாம்.”**

-இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

நாட்டில் உருவாகிவரும் புதிய கூட்டணிகளிடமிருந்து தமது அணியை நோக்கி வரும் அழைப்புகள் பற்றி, தென்கொழும்பு கட்சி அலுவலகத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் மனோ எம்.பி. மேலும் கூறியுள்ளதாவது:-

நேற்று முதல் நாள் அறிவிக்கப்பட்ட புதிய கூட்டணி நண்பர்கள் என்னுடன் பேசிய போது தெளிவாக ஒன்றை சொன்னேன். ஒரு கையால் ராஜபக்ஷர்களை கட்டி அணைத்தப்படி மறுகையால் எம்மை சுட்டி அழைக்க வேண்டாம் என்று சொன்னேன். நாம் இன்று இருக்கும், ஐக்கிய மக்கள் கூட்டணி என்ற இடத்தில் நாம் சௌக்கியமாகவே இருக்கிறோம் எனவும் சொன்னேன்.

தமிழ் முற்போக்கு கூட்டணி நினைத்து இருந்தால், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி ஆகிய அடுத்த நாளே அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கலாம். ஆனால், அதை நாம் செய்யவில்லை. ஏனென்றால் பேரினவாதம், ஊழல் ஆகிய இரண்டு பேரழிவுகளுக்கும் ஏகபோக உரிமையாளர்களான ராஜபக்சர்களுடன் கலப்பு கல்யாணம் செய்ய தமிழ் முற்போக்கு கூட்டணி தயார் இல்லை. எங்கள் இந்த கொள்கை நிலைப்பாடு காரணமாகத்தான் நாம் இன்று ராஜபக்ஷ ஆதரவு ரணில் அரசாங்கத்தில் இடம்பெறவில்லை.

இன்று இந்த ராஜபக்ஷ ஆதரவு ரணில் அரசில் அங்கம் வகிப்பவர்கள், தாம் ஏதோ வெட்டி முறித்து விட்டதாக தப்பு கணக்கு போட்டு விடக்கூடாது. நாம் அங்கே கொள்கை நிலைப்பாடு காரணமாக இல்லை. ஆகவேதான் நீங்கள் அங்கே இருக்கிறீர்கள். அதுதான் உண்மை. சட்டப்படி கோட்டாபய ராஜபக்ஷ 16ஆம் திகதி நவம்பர் 2019 தேர்தலில் பெற்ற மக்கள் ஆணையுடன்தான் இன்றுவரை இந்த அரசு தொடர்கிறது. அந்த பாவத்தின் நிழலில் அங்கமான உங்களுக்கு பாவத்தின் சம்பளம் அடுத்த தேர்தலில் கிடைக்கும்.

16ஆம் திகதி நவம்பர் 2019 முதல் இன்றுவரை, நான்கு வருடங்கள், இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. கடந்த நான்கு வருடங்களாக இந்த அரசாங்கத்தின் பதவிகளில் இருக்கின்ற தமிழ் அரசியல்வாதிகளிடம், நீங்கள் இதுவரை வெட்டி முறித்த சாதனைகளை முடியுமானால் பட்டியல் இடுங்கள் என பகிரங்க சவால் விடுகிறேன். அபிவிருத்தி செய்ய நிதி இல்லை என்பீர்கள். சரி, அபிவிருத்தியை விடுங்கள். அரச நிர்வாகரீதியாக தமிழ் மக்கள் தொடர்பில் நீங்கள் அமைச்சர்களாக, துணை அமைச்சர்களாக, அரசாங்க எம்பிகளாக இதுவரை என்ன செய்து கிழித்துள்ளீர்கள் என பகிரங்கமாக சொல்லுங்கள்? வேண்டுமானால், நாம் ஆட்சியில் இருந்த நான்கு ஆண்டுகளில் நாம் செய்த சாதனைகளையும், இன்று நீங்கள் இந்த நான்கு ஆண்டுகளில் செய்ய தவறிய சீர்கேடுகளையும் நான் பகிரங்கமாக பட்டியல் இடுகிறேன்.

எனவேதான், இந்த புதிய, பழைய பாவங்களின் கூட்டணியில் நாம் இல்லை. நாங்கள் சோரமும் போகவில்லை. பாவமும் செய்யவில்லை. ஆகவே இந்த பாவத்தின் சம்பளம் எமக்கு கிடையாது. எனவே தமிழ் முற்போக்கு கூட்டணி என்ற முற்போக்கு அரசியல் இயக்கம், அடுத்து வரும் புதிய அரசாங்கத்தில், புதிய பலத்துடன், நேர்மையாக அங்கம் வகிக்கும்.-என்றார். (அ)

# அநுரவுக்கு அச்சுறுத்தல்!

## பாதுகாப்பை பலப்படுத்துமாறு கோரிக்கை

*கொழும்பு, பெப். 01*

“நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றி உறுதியாகியுள்ளதால், அவருக்கு ஏதேனும் செய்யக்கூடும் என்ற ஐயம் உள்ளதால் அநுரவுக்கான பாதுகாப்பை பலப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துவருகின்றனர்.” - என்று தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிட்ட விஜித ஹேரத் மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுமா என கேள்விகள் எழுப்பட்டுவருகின்றன. எந்த தேர்தலை ஒத்திவைத்தாலும் ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்க முடியாது. ஆறில் ஐந்து பெரும்பான்மை பலம் இருந்தும் ஜே. ஆர். ஜயவர்தனவால் ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்க முடியாமல் போனது. சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி அவர் பொதுத்தேர்தலைதான் ஒத்திவைத்தார். எனவே, இந்த வருடம் செப்ரெம்பர் 17 மற்றும் ஒக்ரோபர் 17 இற்குள் ஜனாதிபதி தேர்தல் நிச்சயம் நடைபெறும். இதில் வீண் குழப்பம் வேண்டாம்.

இந்த இரண்டு தரப்புகளும் நாட்டை அழித்துவிட்டன, இம்முறை அநுரவுக்குதான் வாக்கு என கிராமங்கள்தோறும் மக்கள் திட்டவட்டமாக கூறிவருகின்றனர். வெற்றியில் எமக்கு சந்தேகம் கிடையாது. ஆனால் இந்த எட்டு மாத காலப்பகுதிக்குள் இவர்கள் ஏதேனும் துருப்பை அடித்து, தேசிய மக்கள் சக்தியின் வெற்றியை சீர்குலைக்கக்கூடும், கவனம் எனவும் மக்கள் எமக்கு கூறிவருகின்றனர்.

முடியாதபட்சத்தில் இவர்கள் அநுரவுக்கு எதையாவது செய்யக்கூடும், அப்படிபட்ட தரப்புதான் அந்த அணிகளில் அரசியல் செய்கின்றன, எனவே, அநுரவை பாதுகாக்கவும் எனவும் மக்கள் கோரிவருகின்றனர். ரணில், சஜித், சந்திரிக்கா என எல்லாம் குழம்பிபோயுள்ளனர். தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால் நமது கதை முடிந்துவிடும் என புலம்பிவருகின்றனர். பகைமையை மறந்து அவர்கள் எல்லாம் ஒன்றிணைந்துள்ளனர்-என்றார். (அ)

# வழக்கு பொருட்களை ஏலத்தில் விற்க திட்டம்

*கொழும்பு, பெப். 01*

உரிமையாளர்களால் விடுவிக்க முடியாத வழக்கு பொருட்களை ஏலத்தில் விற்பனை செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதன்மூலம் பெறப்படும் பணம், குறித்த வழக்குடன் தொடர்புடைய கணக்கில் வைப்புச் செய்யப்பட்டு வழக்கு நிறைவடைந்தவுடன் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என நீதி அமைச்சர், கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, குறித்த வழக்கு பொருளுக்கு உரிய நபர் வழக்கில் வெற்றி பெற்றால் அந்த பணம் குறித்த நபருக்கு வழங்கப்படவுள்ளதுடன், அவர் வழக்கில் தோல்வியடைந்தால் அதனை அரசுடைமையாக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

வழக்கு விசாரணைகளுக்காக நீண்ட காலம் செலவிடப்படுகின்ற காரணத்தினால், பெரும்பாலான வழக்கு பொருட்கள் அழிவடைகின்றமை தொடர்பில் கவனம் செலுத்தி இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக நீதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பிலான சட்டத்திருத்தம் விரைவில் தயாரிக்கப்பட்டு அமைச்சரவை அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது. (அ)

# ஜகத் பிரியங்கரவை எம்.பியாக நியமித்து வர்த்தமானி வெளியீடு

*கொழும்பு, பெப். 01*

ஜகத் பிரியங்கரவை பாராளுமன்ற உறுப்பினராக நியமித்து அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இந்த வர்த்தமானி வெளியிடப்படுள்ளது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மறைவினால் ஏற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்திற்கு இந்த புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 25ஆம் திகதி கட்டுநாயக்க அதிவேக வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகியோர் உயிரிழந்திருந்தனர். (அ)

# டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்த சாந்தனின் தாய்!



*கொழும்பு, பெப். 01*

ராஜீவ் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு விடுதலையாகிய சாந்தனை நாட்டிற்கு அழைத்து வருவது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி ஒரு சில தினங்களுக்குள் பதிலை பெற்றுத் தருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

குறித்த வழக்கின் தீர்ப்பில் இருந்து விடுதலை செய்யப்பட்ட சாந்தன் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், அவரின் தாய் மற்றும் சகோதரர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று முன்தினம் சந்தித்து, சாந்தன் நாட்டுக்கு வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருமாறு கேட்டுக் கொண்டனர்.

இதன்போதே, அமைச்சர் டக்ளஸ் தேவானநந்தாவினால் குறித்த உறுதி மொழி வழங்கப்பட்டது.

இதனிடையே, கடந்த நவம்பர் 27 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் சின்னம் அணிந்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் விடுதலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கொடுப்பனவு விடயத்தில் தலையிடவிட்டால் இன்று முதல் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம்

## சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு

*கொழும்பு, பெப். 01*

சம்பளக் கொடுப்பனவு உள்ளிட்ட தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்க நேற்று மாத்திரமே அதிகாரிகளுக்கு அவகாசம் இருப்பதாக சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த விடயத்தில் தலையீடு செய்யாவிட்டால் இன்று காலை 6.30 முதல் 72 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த சுகாதார ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக அதன் இணை ஏற்பாட்டாளர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

வைத்தியர்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள 35,000 ரூபா கொடுப்பனவை தமக்கும் வழங்குமாறு கோரி 72 சுகாதார ஊழியர்கள் சங்கங்கள் இதற்கு முன்னரும் எதிர்ப்பில் ஈடுபட்டபோதிலும் அரசாங்கத்தினால் அதற்கான பதில் எதுவும் வழங்கப்படவில்லை.

இந்நிலையில், இது சுகாதாரத் துறையில் பாரிய நெருக்கடியை ஏற்படுத்தும் என சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் இணை ஏற்பாட்டாளர் ரவி குமுதேஷ் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# பொதுநிர்வாக அமைச்சில் வேலை என 14 பேரிடம் 42 இலட்சம் ரூபாய் மோசடி!

## கைதான சந்தேக நபருக்கு விளக்கமறியல்

கொழும்பு, பெப். 01

**பொது நிர்வாக அமைச்சில் வேலை வாய்ப்பு பெற்று தருவதாக தெரிவித்து 42 லட்சம் ரூபாவை மோசடி செய்த சந்தேக நபரை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் நேற்று உத்தரவிட்டுள்ளார்.**

குறித்த சந்தேகநபர் 14 பேரிடம் இருந்து 42 இலட்சம் ரூபாயை மோசடி செய்தமை தொடர்பில் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய, குற்றப் புலனாய்வு திணைக்கள எத்தினரால் அவர் கைது செய்யப்பட்டார்.

கனேமுல்ல பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பொதுநிர்வாக அமைச்சின் கடிதத் தலைப்பில் போலியாக தயாரிக்கப்பட்ட கடிதங்களை பயன்படுத்தி குறித்த நபர் இவ்வாறு மோசடியில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதேவேளை, அனுராதபுரம் தொடருந்து நிலையத்தில் 545 லீற்றர் டீசல் திருடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் நேற்று முன்தினம் அனுராதபுரம் பிரதான நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(அ)

# நாட்டை மீட்க இறுதி வாய்ப்பு

## கூறுகிறார் ரொஷான் ரணசிங்க

கொழும்பு, பெப். 01

ஊழலில் ஈடுபடுபவர்களிடம் இருந்து நாட்டை மீட்பதற்கான இறுதி வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்

'ஊழலை தடுப்போம் நாட்டை மீட்போம்' என்ற பெயரில் நுகேகொடையில் அலுவலகம் ஒன்றை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான சன்ன ஜயசுமன, லலித் எல்லாவல உள்ளிட்டோரும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

இந்தநிலையில், 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் ஊழல் மற்றும் மோசடிகளில் ஈடுபட்டவர்களை ஒரு புறமும், அவர்களை எதிர்ப்பவர்களை ஒரு புறமும் அமர்த்த வேண்டும் என ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

ஊழலை எதிர்த்தவர்களுக்கே நாட்டை கட்டியெழுப்புவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# இலங்கைக்கு அண்மையில் மீண்டும் ஒரு காற்று சுழற்சி

கொழும்பு, பெப். 01

இலங்கைத் தீவுக்கு தெற்காக நகரும் காற்று சுழற்சி காரணமாக கடந்த 28ஆம் திகதி முதல் பல பாகங்களில் மழை கால நிலை நீடித்ததாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆனால் அந்த காற்று சுழற்சியின் நகர்வு தாமதம் காரணமாக கடந்த 29ஆம் திகதி முதல் சற்று கனத்த மழை பெய்தது.

தற்போது இந்த காற்று சுழற்சி இலங்கையின் தெற்காக நகர்ந்து கொண்டிருக்கின்றது.

காற்று சுழற்சி நகர்ந்து சென்ற பின் பெரும்பாலும் நேற்று முதல் தற்போது நிலவும் மழையுடனான காலநிலை படிப்படியாக குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன் பின்னர் சில நாட்களுக்கு பெரும்பாலும் சீரான காலநிலையே நீடிக்கும் என அந்த திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மீண்டும் ஒரு காற்று சுழற்சி எதிர்வரும் 13, 14, அல்லது 15ஆம் திகதியளவில் இலங்கைத் தீவுக்கு அண்மையாக வரலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனிடையே, கிழக்கு, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் முல்லைத்தீவு மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

# கருங்கல் ஏற்றுமதிக்கு அமைச்சரவை அனுமதி!

கொழும்பு, பெப். 01

வரையறைக்கு உட்பட்டு நாட்டிலிருந்து கருங்கல்லை ஏற்றுமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

நிர்மாணம் மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கு கருங்கல்லின் பயன்பாடு ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பதால், கருங்கல் சுரங்கத் தொழிலில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் மற்றும் அது சார்ந்த சமூகங்களின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலைமையை கருத்திற் கொண்டு, வரையறைக்கு உட்பட்டு கருங்கல்லை ஏற்றுமதி செய்வதன் மூலம் இலங்கைக்கு அந்நிய செலாவணியை ஈட்டும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது பொருத்தமானது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணப் பணியின் போது அகற்றப்பட்ட கருங்கற்கள் தற்போது துறைமுக நிர்வாக கட்டடத்துக்கு அருகிலும், ஹம்பாந்தோட்டை புதிய வைத்தியசாலை வளாகத்திலும் குவிக்கப்பட்டுள்ளன.

குறித்த கருங்கற்கள் உடனடியாக அகற்றப்பட வேண்டுமென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கமைய, புவிசரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் கண்காணிப்பின் கீழ் குறித்த கருங்கற்களை துரிதமாக ஏற்றுமதி செய்வதற்கு அனுமதியை வழங்கவும், ஒரு மில்லியன் மெட்ரிக் டன் கருங்கற்களை ஏற்றுமதி செய்வதற்கான இயலுமை உள்ளிட்ட விடயங்களை ஆராய்வதற்கு குழுவொன்றை நியமிக்கவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

(அ)

# பீடி உற்பத்தியாளர்களின் நட்டமடைந்த ரூ.4 பில்லியன் வரியை மீளப்பெற திட்டம்!

கொழும்பு, பெப். 01

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு பீடி சுற்றும் இலைகள் இறக்குமதி செய்யப்பட்டமையின் ஊடாக நட்டமடைந்த 4 பில்லியன் ரூபாய் வரி வருவாயை மீளப்பெறுவதற்கு விசேட வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

பீடி உற்பத்தியாளர்களுடன் நேற்று முன் தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சட்டரீதியாக இறக்குமதி செய்யப்படும் பீடி சுற்றும் இலைகளை விட அதிகமான பீடி சுற்றும் இலைகள் சட்ட



விரோத முறையில் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளமை தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2023ஆம் ஆண்டு இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பீடி சுற்றும் இலைகளின் அளவு 323,389 கிலோகிராம் என சுட்டிக்காட்டிய அவர், அனைத்து வரிகளும் அறவிடப்பட்டதன் பின்னர் அதிலிருந்து கிடைக்கும் வருமானம் சுமார் 3 பில்லியன் ரூபாயாகும் என தெரிவித்துள்ளார்.

எனினும், நாட்டில் சுமார் 15 லட்சம் கிலோகிராம் பீடி சுற்றும் இலைகள் புழக்கத்தில் இருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

வரியைக் குறைப்பதன் மூலம் சட்டவிரோத பீடி சுற்றும் இலைகளின் இறக்குமதியை குறைக்க முடியும் எனவும் அதற்கான முறையான திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில் அரசாங்கத்தின் வரி வருவாயை 7 பில்லியன் ரூபாயாக அதிகரிக்க முடியும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

(அ)

# 2 மோட்டார் சைக்கிள்கள் மன்னாரில் மோதி விபத்து!

## இளம் தாய் காயம்

மன்னார், பெப். 01

மன்னார் நானாட்டான் பகுதியில் பஸ் நிலையத்தின் முன்பாக உள்ள பிரதான வீதியில் நேற்று புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தில் இளம் தாய் ஒருவர் காயமடைந்து நானாட்டான் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த விபத்தில் காயமடைந்த இளம் தாய் அரிப்பு துறையில் வசிப்பவர் என்று தெரிய வருகிறது.

அரிப்புத்துறை பகுதியிலிருந்து வங்காலை நோக்கி ஆண் ஒருவர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிளும் நானாட்டான் பஸ் தரிப்பிடத்தில் இருந்து அரிப்பு துறை நோக்கி குழந்தை ஒன்றுடன் குறித்த இளம் தாய் பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகின.

குறித்த விபத்தில் தாய் காயங்களுக்கு உள்ளாகியபோதும் குழந்தை காயம் எதுவுமின்றி தெய்வாதீனமாக காப்பாற்றப்பட்டுள்ளார்.

காயமடைந்த தாய் மற்றும் மகள் இருவரும் அருகில் உள்ள நானாட்டான் பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு துறைமுகதில் வருகை தரும் கப்பல்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, பெப். 01

கொழும்பு துறைமுகத்தை வந்தடையும் கப்பல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என இலங்கை துறைமுக அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இந்த வருடத்தின் முதல் 29 நாட்களில் 330 இற்கும் அதிகமான கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

மேலும் துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான முனையங்களில் மாத்திரம் கடந்த 29 நாட்களில் கையாளப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கை, கடந்த வருடத்தை ஒப்பிடுகையில் 60.9 வீதத்தால் அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# ஆண்டின் முதல் 28 நாட்களில் 189,574 சுற்றுலாப் பயணிகள்!

கொழும்பு, பெப். 01

ஆண்டின் முதல் 28 நாட்களில் நாட்டுக்கு 189,574 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த 15ஆம் திகதி மாத்திரம் 8,541 சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வந்ததாக தரவுகள் தெரிவிக்கின்றன.

அதேநேரம் ஆண்டின் முதல் 28 நாட்களில் இந்தியாவிலிருந்தே அதிக சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இதன்படி, குறித்த காலப்பகுதியில் இந்தியாவில் இருந்து 31,920 சுற்றுலா பயணிகளும், ரஷ்யாவில் இருந்து 28,159 சுற்றுலா பயணிகளும், பிரித்தானியாவில் இருந்து 15,252 சுற்றுலா பயணிகளும் இலங்கைக்கு வந்துள்ளனர்.

(அ)

# மாணவர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் களனி பல்கலைக்கு சென்றார் ரணில்!

## புதிய கட்டடத்தை திறந்து வைத்தார்

கொழும்பு, பெப். 01

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க களனி பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்துள்ளார்.**

களனி பல்கலைக்கழகத்தின் பாலி மற்றும் பௌத்த கற்கைகள் நிறுவகத்தின் புதிய கட்டட வளாகத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொள்வதற்காகவே அவர் இவ்வாறு விஜயம் செய்துள்ளார்.

இன்படி புதிய கட்டட வளாகம் நேற்று புதன்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் திறந்து வைக்கப்பட்டது.

இதேவேளை, ஜனாதிபதியின் வருகையை கண்டித்து களனிப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் கொழும்பு-கண்டி பிரதான வீதியை மறித்து நடத்திய போராட்டத்தை கலைக்க பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர்.

எவ்வாறாயினும், மாணவர்கள் அங்கிருந்து கலைந்து சென்ற போதிலும், பல்கலைக்கழக நிர்வாக கட்டடத்துக்குள் எந்தவொரு தரப்பினரையும் நுழைய அனுமதிக்காமல் நேற்று முன்தினம்மாலை வரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# வவுனியா நகர சபையினரால் 80 கட்டாக்காலி மாடுகள் பிடிப்பு

வவுனியா, பெப். 01

வவுனியா நகரசபையினால் வீதிகளில் நடமாடித்திரிந்த 80 கட்டாக்காலி மாடுகள் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை பிடிக்கப்பட்டன.

வவுனியா நகர எல்லைக்குட்பட்ட வீதிகளில் இரவு மற்றும் பகல் வேளைகளில் நடமாடும் கால்நடைகளால் அதிகளவான விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன.

இதனையடுத்து நகர சபைக்குள்ள அதிகாரங்களை கொண்டு கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் நகர சபையினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் நேற்று முன் தினம் நகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் வீதிகளில் பொது போக்குவரத்துக்கு இடையூறாக நின்ற 80 இற்கும் மேற்பட்ட கால்நடைகள் நகர சபையினரால் பிடிக்கப்பட்டு தற்போது சபையின் பாராமரிப்பில் உள்ளன.

எனவே கால்நடை உரிமையாளர்கள் தமது கால்நடைகளுக்குரிய அடையாளத்தை உறுதிப்படுத்திய பின் தண்டப் பணத்தைச் செலுத்தி அவற்றை மீளப்பெற்றுச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

10 நாட்களுக்குள் உரிமை கோரப்படாத கால்நடைகள் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபை அறிவித்துள்ளது. (அ)

# பழங்களின் விலைகளும் எகிறின!

கொழும்பு, பெப். 01

நாட்டில் மரக்கறி வகைகளின் விலைகள் அதிகரித்துள்ள நிலையில், பழங்களின் விலைகளும் எகிறியுள்ளன.

நுவரெலியாவில் அனைத்து வகையான பழங்களின் விலையும் அதிகரித்துள்ளது என்று பழங்கள் மொத்த வியாபாரிகள், சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் தெரிவிக்கின்றனர்.

கடும் மழையுடனான சீரற்ற காலநிலையால் பழங்களின் விளைச்சல் குறைவடைந்துள்ளது. அத்துடன், இறக்குமதிச் செலவும் அதிகரித்துள்ளது. விலை அதிகரிப்புக்கு இதுவே காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி ஒரு கிலோ நெல்லியின் 1200 ரூபாவாகவும், சிவப்பு திராட்சை கிலோ ஒன்றின் விலை 2,500 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது. ஒரு கிலோ



அன்னாசிப்பழத்தின் விலை 700 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது. அத்துடன் ஆப்பிள், ஆரஞ்சு உள்ளிட்ட ஏனைய பழங்களின் விலையும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

மேலும் பழங்களின் விலை உயர்வால் விற்பனை குறைந்துள்ளதாகவும் விற்பனையாளர்கள் தெரிவித்தனர். (அ)

# யுவதி பாலியல் துஷ்பிரயோகம் தபால் நிலைய ஊழியர்கள் கைது

கொழும்பு, பெப். 01

தபால் நிலையத்துக்கு தாயுடன் சென்ற யுவதியை தபால் நிலைய ஊழியர் ஒருவரின் வீட்டுக்கு அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய நான்கு தபால் நிலைய ஊழியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் ருவான்வெல்ல மற்றும் இம்புலான பிரதேசங்களில் உள்ள தபால் நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்களாவர்.

பாதிக்கப்பட்டவர் கன்னந்தோட்டை பிரதேசத்தை சேர்ந்த 26 வயதுடைய யுவதியாவார்.

இவர் கடந்த 26 ஆம் திகதி தனது தாயுடன் ருவான்வெல்ல பிரதேசத்தில் உள்ள தபால் நிலையம் ஒன்றிற்கு சென்றிருந்தார்.

இவர் தபால் நிலையத்தில் அறிமுகமான இளைஞர் ஒருவருடன் நட்பாக பழகி வந்துள்ளார்.

இதன்போது குறித்த இளைஞர் யுவதியை கன்னந்தோட்டை பிரதேசத்தில் உள்ள வீடொன்றிற்கு அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

பின்னர் குறித்த இளைஞர் தபால் நிலையங்களில் கடமையாற்றும் தனது 3 நண்பர்களையும் அழைத்து வந்து அவர்களும் குறித்த யுவதியை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட யுவதி இது தொடர்பில் குடும்பத்தினருக்கு தெரிவிக்கவில்லை.

தபால் நிலைய ஊழியர் வீட்டுக்கு யுவதி சென்றிருந்தமை தொடர்பில் யுவதியின் மூத்த சாகோதரிக்கு நபரொருவர் மூலம் தெரியவந்துள்ளது.

மூத்த சகோதரி இது தொடர்பில் தனது இளைய சகோதரியிடம் விசாரித்த போது அவர் சம்பவத்தன்று நடந்த விடயங்களை கூறியுள்ளார்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட யுவதியின் தாய் இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட யுவதி சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இலங்கை மீனவர்களை பாதுகாப்பாக அழைத்துவரும் நடவடிக்கையில் இந்திய கடற்படையினரும் களத்தில்!

கொழும்பு, பெப். 01

இலங்கை கடற்படையினர் சீஷெல்ஸ் பாதுகாப்புப் படையினருடன் இணைந்து சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட இலங்கை மீன்பிடிக் கப்பலில் இருந்த மீனவர்களை மீட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட மீனவர்களை பாதுகாப்பாக அழைத்துவர இந்திய கடற்படையும் இணைந்துள்ளது.

கடந்த 27 ஆம் திகதியன்று சோமாலிய கடற்கொள்ளையர்கள் இலங்கை கொடியுடன் பயணித்த பலநாள் மீன்பிடி இழுவைப்படகை கடத்திச் சென்றனர்.

சோமாலியாவின் மொகடிவிலிருந்து கிழக்கே 955 கடல் மைல் தொலைவில் இந்த கடத்தல் சம்பவம் பதிவாகியுள்ளது.

இலங்கை மீன்பிடிக் கப்பல் கடத்தப்பட்டதையடுத்து ஒருங்கிணைந்த பலதரப்பு நடவடிக்கையாக இந்திய கடற்படையினர் சீஷெல்ஸ் பாதுகாப்புப் படையினர் மற்றும் இலங்கை கடற்படையுடன் இணைந்து கடத்தப்பட்ட கப்பலை வெற்றிகரமாக தடுத்து மீட்க உதவியது.

இந்திய கடற்படையின் சாரதா கடத்தப்பட்ட மீன்பிடிக் கப்பலை கண்டுபிடித்து இடைமறிக்க ஹேல் சீ கார்டியனுக்கு பணித்தது.

புதுடில்லியில் உள்ள இலங்கை மற்றும் சீஷெல்ஸ் சர்வதேச தொடர்பு அதிகாரிகள் மூலம் திறமையான செயல்பாட்டு ஒருங்கிணைப்பு மற்றும் தகவல் பகிர்வு ஆகியவற்றின் விளைவாக கடந்த 29 ஆம் திகதி அன்று கடத்தப்பட்ட மீன்பிடிக் கப்பலை சீஷெல்ஸின் ரொபாஸ் என்ற கப்பல் தடுத்து நிறுத்தியது.

இதையடுத்து, மூன்று கடற்கொள்ளையர்களும் சீஷெல்ஸ் கடலோர காவல்படையிடம் சரணடைந்தனர், மேலும் ஆறு இலங்கை மீனவர்களும் தற்போது பாதுகாப்பாக உள்ள நிலையில், அவர்களை சீஷெல்ஸின் கப்பல் மாஹேவுக்கு அழைத்துச் சென்றுள்ளது. (அ)

# ஐ.நா. உணவு விவசாய அமைப்பின் பிரதிநிதிகள் குழு நாட்டுக்கு வருகை

கொழும்பு, பெப். 01

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பிராந்திய அலுவலகத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று நாட்டுக்கு வருகைதந்துள்ளது.

நாட்டில் நடைபெறவுள்ள ஆசிய பசுபிக் பிராந்திய மாநாட்டின் 37 ஆவது அமர்வின் முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவதற்காக இந்த குழு வருகை தந்துள்ளது.

குறித்த மாநாடு பெப்ரவரி 19 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பிராந்திய அலுவலகத்தின் பிரதிநிதிகள் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவை சந்தித்து கலந்துரையாடியுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் உள்ள 46 உறுப்பு நாடுகளைச் சேர்ந்த விவசாய அமைச்சர்கள் மற்றும் உயர்மட்ட அதிகாரிகளுக்கு உணவு மற்றும் விவசாயம் தொடர்பான சவால்கள் மற்றும் முன்னுரிமைகள் குறித்து விவாதிப்பதும் பிராந்திய ஒருங்கிணைப்பை ஊக்குவிப்பதுமே ஆசிய பசிபிக் பிராந்திய மாநாட்டின் பிரதான நோக்கமாகும். (அ)

# அஸ்வெசும நலன்புரி திட்டத்தில் மாற்றம்!

கொழும்பு, பெப். 01

அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டத்தை திருத்தங்களுடன் உள்ளடக்கி நடைமுறைப்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி, அஸ்வெசும பயனாளியாக தகைமை பெற்றவர்களில் சமூகப் பிரிவுக்கான நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கான செல்லுபடிக் காலத்தை ஏப்ரல் முதலாம் திகதி முதல் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பொருளாதார நெருக்கடியால் தற்காலிகமாக வருமானம் இழக்கப்பட்டுள்ளவர்கள் நன்மைகளை பெற்றுக் கொள்ளும் செல்லுபடிக் காலத்தை ஜனவரி முதலாம் திகதி முதல் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள சமூகப் பிரிவு மற்றும் பொருளாதார நெருக்கடியால் தற்காலிகமாக வருமானம் இழக்கப்பட்டுள்ள பிரிவு போன்ற இரண்டு பிரிவுகளையும் ஒன்றிணைத்து 80,000 குடும்பங்களுக்காக ஜனவரி முதலாம் திகதி முதல் வழங்கப்படும் 5,000 ரூபாய் தொகையை எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை செலுத்தவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அஸ்வெசும திட்டத்தின் இரண்டாவது சுற்றுக்கான விண்ணப்பங்கள் கோரலை 2024 முதலாம் காலாண்டில் ஆரம்பித்து 2024 ஜூன் மாதத்தில் நிறைவு செய்து ஜூலை மாதம் தொடக்கம் கொடுப்பனவுகளை வழங்குவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதேநேரம், அடையாளம் காணப்பட்ட சிறுநீரக நோயாளர்களுக்கு 7,500 ரூபாயும் இயலாமையுள்ள நபர்களுக்கு 7,500 ரூபாயும் முதியோர்களுக்கு 3,000 ரூபாயும் 2024 ஏப்ரல் மாதம் முதல் மாதாந்தக் கொடுப்பனவாக செலுத்தவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# வெள்ளத்தால் சேதமுற்ற உட்கட்டமைப்புகளை புனரமைப்புச் செய்ய அனுமதி தேவையில்லை

## உடனடியாக செயற்பட கிழக்கு ஆளுநர் பணிப்பு

அம்பாறை, பெப். 01

**அம்பாறை மாவட்டத்தில் வெள்ளத்தினால் சேதமடைந்துள்ள தற்போதைய உட்கட்டமைப்புகளை புனரமைப்பு செய்வதற்கு எவ்வித அனுமதியும் தேவையில்லை எனவும் உடனடியாக செயற்படுமாறும் கிழக்கு மாகாண ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார்.**



அம்பாறை மாவட்டத்தில் அண்மைய வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட நிவாரண வேலைத்திட்டங்கள் தொடர்பிலான முற்போக்குக் கூட்டம் நடைபெற்றது.

சேதமடைந்த சாலைகள், நீர்ப்பாசனத் தொட்டிகள், பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளை உடனடியாக புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு இதன் போது கிழக்கு ஆளுநரால் அறிவுறுத்தப்பட்டது.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு, வெள்ளத்தினால் சேதமடைந்துள்ள தற்போதைய உட்கட்டமைப்புகளை புனரமைப்பு செய்வதற்கு எவ்வித அனுமதியும் தேவையில்லை எனவும் உடனடியாக செயற்படுமாறும் கிழக்கு மாகாண ஆளுநர் ஆலோசனை வழங்கியுள்ளார். (அ)

# கிழக்கு மாகாண கராத்தே சம்மேளனத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான முதலாவது அமர்வு



மட்டக்களப்பு, பெப். 01

கிழக்கு மாகாண கராத்தே சம்மேளனத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான முதலாவது ஒன்றுகூடலும், இவ் வருடத்தில் அமுல் படுத்தப்படவுள்ள செயல் திட்டங்களை ஆராய்வு சம்பந்தமான செயலமர்வும் மட்டக்களப்பு ஹோட்டல் ஒன்றில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

கிழக்கு மாகாண சிறிலங்கா கராத்தே தோ சம்மேளனத்தின் தலைவர் முகம்மத் இக்பால் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கிழக்கு மாகாணத்தின் நிருவாக சபை, பொதுச் சபை உறுப்பினர்கள் மற்றும் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (அ)

# உணவகங்களில் திடீர் சோதனை



அம்பாறை, பெப். 01

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட உணவகங்கள் மற்றும் கிழங்குக் கடைகள் கடைகளில் திடீர் சோதனை நடத்தப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி கே.எல்.எம் றயீஸ் வழிகாட்டலில் மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர் எம்.எம்.எம். பைசால் , பொதுச்சுகாதார பரிசோதகர், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் டெங்கு களத் தடுப்பு உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

இதில் மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுகள், உணவுகளை கையாளுவதற்கு பொருத்தமற்ற உபகரணங்கள் மற்றும் பழைய எண்ணெய்கள் என்பன கைப்பற்றப்பட்டன. (அ)

# சம்மாந்துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்

அம்பாறை, பெப். 01

சம்மாந்துறை பிரதேச செயலக அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் கடந்த செவ்வாய்க் கிழமை சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும்,முன்னாள் அமைச்சரும் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம் அதாவுல்லாஹ் தலைமையில் சம்மாந்துறை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசீம், கணக்காளர் ஐ.எல் பாரீஸ் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம், திணைக்களங்களின் பிரதிநிதிகள்,மஜ்லிஸ் சூறா பிரதிநிதிகள், பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இவ் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் பிரதேச காணிப் பிரச்னைகள், மையவாடி மற்றும் பாடசாலைகளுக்கு காணி விடுவிப்பு விடயங்கள்,நீர்பாசனம் சார்ந்த முன்மொழிவுகளும் அதற்கான தீர்வுகளும் ,விவசாயம் சார்ந்த முன்மொழிவுகளும் அதற்காம தீர்வுகளும்,நகரமயமான கிராமங்களின் அபிவிருத்தி விடயங்கள் போன்றவர்கள் பல விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டு முடிவுகளும் எடுக்கப்பட்டன. (அ)

# கிழக்கு மாகாணத்தின் விவசாய உற்பத்திகளை அதிகரிப்பதற்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

## கிழக்கு மாகாண ஆளுநரால் ஆரம்பித்து வைப்பு





திருமலை, பெப். 01

கிழக்கு மாகாணத்தின் விவசாய உற்பத்திகளை அதிகரிப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட விவசாயிகளுக்கு விவசாயத்தில் நவீன தொழில்நுட்பம் குறித்து சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டதுடன், விவிசாய அமைச்சும், ஸ்ரீ.பாமயன் - இயற்கை விவசாய விஞ்ஞானி, ஸ்ரீ ராஜா கணேஷ் - இயற்கை விவசாய ஆலோசகர் ஆகியோருடன் இணைந்து விவசாயிகளுக்கு அவர்களின் விளைச்சலை அதிகரிக்க ஆலோசனைகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மரத்தை வெட்டியமைக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்கு!

மட்டக்களப்பு, பெப். 01

மட்டக்களப்பு ஜாமிஉஸ்ஸலாமா ஜ/ம்மா பள்ளிவாயல் முன்றலில் நின்ற 350 வருடங்கள் பழைமையான வாகை மரத்தை சட்டத்திற்கு முரணாக வெட்டியமைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை வழக்கு நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கின் மனுதாரர்கள் குறிப்பிட்ட மரம், வரலாற்றுச் சிறப்புமிக்கது என்றும் மட்டக்களப்பின் ஒரு அடையாளமாக இருந்தது என்றும் குறிப்பிட்ட மரம் சூழலுக்கு பயன்மிக்கதாக காணப்பட்டது எனவும் அதனை பலாத்காரமாக வெட்டியமையினால் பிரதிவாதிகள் தங்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாக மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த மரத்தில் பல நூற்றுக் கணக்கான பறவைகள் வசித்து வந்தன என்றும் மரம் வெட்டப்பட்டவுடன் கூடுகளை இழந்துள்ளன எனவும் மனுதாரர்கள் குறிப்பிட்டனர்.

பள்ளிவாசலுக்குச் சொந்தமான இடத்தில் நிற்கும் வாகை மரத்தினை பள்ளிவாசலின் அனுமதியின்றி மட்டக்களப்பு பிராந்திய இலங்கை மரக்கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள், மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகியோரின் ஆதரவோடு சட்டத்திற்கு முரணாக வெட்டி வீழ்த்தியுள்ளனர் என மனுதாரர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வழக்கின் பிரதிவாதிகளாக இலங்கை மரக்கூட்டுத்தாபனம், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மட்டக்களப்பு மாநகர சபை மற்றும் ஜாமியுஸ்ஸலாமா ஜூம்மா பள்ளிவாசல் நிர்வாகிகள் ஆகியோர்களின் பெயரிடப்பட்டுள்ளனர்.

மனுதாரர்கள் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், சட்டத்தரணி ஜா.றாஸி முஹம்மத் ஆகியோருடன் அறிவுறுத்தல் சட்டத்தரணியாக றுடானி ஸாஹிர் ஆகியோர் ஆஜராகி இருந்தனர்.

(அ)

# இஸ்ரேலிய இராணுவத்தை திரும்பப் பெறமாட்டோம்!

## நெத்தன்யாகு திட்டவட்டம்!



ஜெருசலேம், பெப். 01

**நாம் காஸா பகுதியில் இருந்து வெளியேறவோ அல்லது சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான பாலஸ்தீன பயங்கரவாதிகளை விடுவிக்கவோ மாட்டோம் என்று கூறி, மறைமுக போர் நிறுத்த பேச்சுவார்த்தையின் போது ஹமாஸ் முன்வைத்த இரண்டு முக்கிய கோரிக்கைகளை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு நிராகரித்துள்ளார்.**

மேற்குக் கரையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர் , "நாங்கள் காசா பகுதியில் இருந்து இஸ்ரேலிய இராணுவத்தை திரும்பப் பெறமாட்டோம், ஆயிரக்கணக்கான பயங்கரவாதிகளை நாங்கள் விடுவிக்க மாட்டோம், இந்த போரின் அனைத்து இலக்குகளையும் அடையாமல் நாங்கள் முடிக்க மாட்டோம். இதன் அர்த்தம் என்னவென்றால் ஹமாஸை அழிப்பதுதான், காசாவானது மீண்டும் ஒரு போதும் இஸ்ரேலுக்கு அச்சுறுத்தலாக இல்லை என்பதை உறுதிப்படுத்துவதுதே எமது இலக்கு" என தெரிவித்துள்ளார். (அ)

# வாரத்தில் 3 நாட்கள் விடுமுறை: மகிழ்ச்சியில் ஜேர்மன் மக்கள்!



பேர்ளின், பெப். 01

வாரத்தில் நான்கு நாட்கள் மாத்திரமே பணிபுரியும் திட்டத்தினை ஜேர்மனி அரசு நடைமுறைப்படுத்தவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி இன்று முதல் 6 மாதங்களுக்கு, குறித்த திட்டம் நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளதாகவும், வாரத்தில் மீதமுள்ள 3 நாட்களை விடுமுறையாக வழங்கத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் ஜேர்மனியின் 45 நிறுவனங்கள் பங்கேற்கவுள்ளதோடு, இதன் மூலம் நாட்டில் நிலவும் குறைந்த பணியாளர்கள் பிரச்னையும் தீர்வுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் இத்திட்டத்தின் மூலம் ஊழியர்களின் உடல் மற்றும் மனநிலை ஆரோக்கியமடைவதோடு அவர்களது செயல்திறனும் அதிகரிக்கும் எனவும் ஜேர்மனி அரசு எதிர்பார்க்கிறது.

உலகில் வளர்ந்த நாடுகளான டென்மார்க், நெதர்லாந்து, அவுஸ்திரேலியா, பெல்ஜியம், ஸ்பெயின்,பிரித்தானியா ஜப்பான் போன்ற நாடுகள் குறைவான வேலை நேரத்தைக் கடைபிடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# காஸாவில் முழுமையான போர் நிறுத்தம் வேண்டும்!

## ஹமாஸ் அமைப்பின் சிரேஷ்ட அதிகாரி

ஜெருசலேம், பெப். 01

காஸாவில் முழுமையான போர் நிறுத்தம் மேற்கொள்ளப்படவேண்டும் என பலஸ்தீன போராளிகள் அமைப்பான ஹமாஸ் கேட்டுக்கொண்டுள்ளதாக அதன் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்காலிக போர் நிறுத்தத்திற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக கத்தார் கூறியுள்ள நிலையில்,ஹமாஸின் இந்த கருத்து வெளியாகியுள்ளது.

நாங்கள் முழுமையான போர் நிறுத்தத்தைப் பற்றிப் பேசுகிறோம். தற்காலிக போர் நிறுத்தத்தை பற்றி அல்ல என தாஹிர் அல்-நுனு, என்ற ஹமாஸின் அந்த சிரேஷ்ட அதிகாரி கூறியுள்ளார்.

போர் நிறுத்தப்பட்ட பின்னர் பணயக்கைதிகளின் விடுதலை உட்பட ஏனைய விடயங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையில் போர் ஆரம்பித்த பின்னர், எகிப்து மற்றும் அமெரிக்காவுடன் இணைந்து கத்தார் சமாதான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில், அமெரிக்க புலனாய்வு அமைப்பின் தலைவர் பில் பர்ன்ஸ், இஸ்ரேல் மற்றும் எகிப்து பாதுகாப்பு அதிகாரிகளுடன் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடந்த கூட்டங்களில், கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்தப்படும் போர் நிறுத்தத்திற்கான பொறிமுறை பரிந்துரைக்கப்பட்டதாக கத்தார் பிரதமர் ஷேக் முகம்மது அப்துல்ரஹ்மான் அல் தானி தெரிவித்துள்ளார்.

இந்த பரிந்துரை குறித்து ஹமாஸ் அமைப்பிற்கு தெரிவித்து, அவர்களை ஆக்ககரமான முறையில் போர் நிறுத்த செயற்பாடுகளில் ஈடுபடுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

எது எப்படி இருந்த போதிலும் பாரிஸில் முன்வைக்கப்பட்ட போர் நிறுத்த யோசனை தொடர்பான பரிந்துரையை கட்டாரிடம் இருந்து ஹமாஸ் பெற்றுக்கொண்டதா என்ற தகவல் வெளியாகவில்லை. (அ)



# இம்ரான் கானுக்கும் மனைவிக்கும் மற்றொரு வழக்கில் 14 ஆண்டு சிறை

## இஸ்லாமாபாத் ஊழல் எதிர்ப்பு நீதிமன்றம் தீர்ப்பு

இஸ்லாமாபாத், பெப். 01

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி புஷ்ரா பீபிக்கு 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

அரசு பரிசுகளை சட்டவிரோதமாக விற்பனை செய்த வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்ட நிலையில் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

தலைநகர் இஸ்லாமாபாத்தில் உள்ள ஊழல் எதிர்ப்பு நீதிமன்றம் நேற்று புதன்கிழமை தீர்ப்பை வழங்கியது.

அரச இரகசியங்களை வெளியிட்டதாக குற்றம்சாட்டப்பட்ட சைபர் மோசடி வழக்கில் இம்ரான் கான் மற்றும் முன்னாள் வெளிவிவாகர அமைச்சர் ஷா மெஹ்மூத் குரேஷிக்கு தலா 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை கடந்த செவ்வாய்க்கிழமை விதிக்கப்பட்டது.



நீதிமன்றின் இந்த தீர்ப்புகளானது பெப்ரவரி 8 பொதுத் தேர்தலுக்கு ஒரு வாரத்திற்கு முன்னதாக வந்துள்ளன.

2018 ஒகஸ்ட் முதல் 2022 ஏப்ரல் வரை பாகிஸ்தானின் பிரதமராக இருந்த இம்ரான் கான் பாராளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியடைந்தார்.

சைபர் வழக்கு உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளில் கடந்த ஆகஸ்ட் மாதம் முதல் சிறையில் உள்ளார்.

இந் நிலையில் புதிய நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு அமைவாக இம்ரான் கானின் தண்டனைகள் தொடர்ச்சியாக அல்லது ஒரே நேரத்தில் வழங்கப்படுமா என்பது தெளிவாகத் தெரியவில்லை. (அ)

# இம்ரான்கான் ஆதரவாளர்கள் நடத்திய பேராட்டத்தின்போது குண்டு வெடிப்பு!

## 4 பேர் பலி



இஸ்லாமாபாத், பெப். 01

பாகிஸ்தானில் இம்ரான்கானுக்கு வழங்கப்பட்ட 10 ஆண்டு சிறை தண்டனையை கண்டித்து பலுசிஸ்தானில் நடந்த போராட்டத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு சம்பவத்தில் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தானின் பிரதான கட்சியான பாகிஸ்தான் தெஹ்ரிக்-இ-இன்சாப் கட்சியின் தலைவராக மாஜி கிரிக்கெட் அணி கேப்டனும், முன்னாள் பிரதமருமான இம்ரான்கான் பதவி வகித்து வந்தார். இவர் தனது பதவி காலத்தில் அரசு ரகசியங்களை வெளிப்படுத்திய வழக்கில் 10 ஆண்டு சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

இதை கண்டித்து பாகிஸ்தான் தெஹ்ரிக் -இ- இன்சாப் கட்சி ஆதரவாளர்கள் பலுசிஸ்தான் மாகாணத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் பாகிஸ்தான் தெஹ்ரிக் -இ- இன்சாப் கட்சியைச் சேர்ந்த 4 பேர் உயிரிழந்துள்ளதுடன் 20 பேர் காயமடைந்துள்ளனர்.

இதனை தொடர்ந்து அங்கு வன்முறைச் சம்பவங்களால் பதற்ற நிலை அதிகரித்துள்ளது.

பாகிஸ்தான் பாராளுமன்றத்திற்கு எதிர்வரும் பெப்ரவரியில் பொதுத்தேர்தல் நடக்க உள்ள நிலையில் இம்ரான்கானுக்கு விதிக்கப்பட்ட தண்டனையால் கடும் சர்ச்சை எழுந்துள்ளது. (அ)

# எதிர்க்கட்சி பொறுப்புடன் செயற்படுவதே சிறந்தது!

## ஐக்கிய தேசியக் கட்சி சொல்கிறது



கொழும்பு, பெப். 01

**இந்த வருடத்தில் பொருளாதார ரீதியில் நாட்டை ஸ்திரப்படுத்த தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துவரும்போது அதனை குழப்புவதற்கே ஐக்கிய மக்கள் சக்தி ஆர்ப்பாட்டம் மேற்கொண்டு வருகிறது. பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சி என்றால் ஒருபோது இந்த சந்தர்ப்பத்தில் ஆர்ப்பாட்டம் செய்திருக்கமாட்டார்கள் என ஐக்கிய தேசிய கட்சி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆஷூ மாரசிங்க தெரிவித்தார்.**

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2024ஆம் ஆண்டு நாடு பொருளாதார ரீதியில் முன்னேறிச் செல்லும் வருடம். அதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனை சகித்துக்கொள்ளாத எதிர்க் கட்சி தங்களின் வங்குரோத்து நிலையை மறைப்பதற்காக குறுகிய அரசியல் நோக்கில் மக்களை தூண்டி பொருளாதாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். அதன் ஓர் அங்கமாகவே கொழும்பில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் உலகில் பல நாடுகள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டடிருந்தபோது, அந்த நாடுகளின் எதிர்க்கட்சிகள் தங்களின் நாட்டை பாதுகாத்துக் கொள்ள அரசாங்கத்துக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கியதன் மூலம் அந்த நாடுகள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. இதேபோன்று கிரீஸ், ஆர்ஜென்ரீனா போன்ற நாடுகள் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் அந்நாட்டு எதிர்க்கட்சிகள் அதனை பயன்படுத்திக் கொண்டு அரசியல் இலாபம் தேட முயற்பட்டதால் இன்னும் அந்த நாடுகள் வீழ்ச்சியடைந்தே இருக்கின்றன. அதனால் அந்த நாடுகளின் நிலைக்கு இலங்கை செல்லாமல் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்ததால் குறுகிய காலத்திலேயே எமக்கு பொருளாதார நெருக்கடியில் இருந்து ஓரளவு மீள முடியுமாகி இருக்கிறது.

அதனால் பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சி என்றால், தற்போதைய நிலையில் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அரசாங்கத்துக்கு தேவையான ஆதரவை வழங்க வேண்டும். ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளவும் உரிமைகளுக்காக போராட்டம் மேற்கொள்ளவும் அனைவருக்கும் உரிமை இருக்கிறது. ஆனால், நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் வகையில் எதிர்க்கட்சிகள் முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்தை வன்மையாக கண்டிக்கிறோம்.

அதேநேரம் வேலை நாளான நேற்றைய தினம் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் மக்களை கஷ்டத்துக்கு உள்ளாக்கி கொழும்பில் இவ்வாறு ஆர்ப்பட்டம் மேற்கொள்ள எடுத்த நடவடிக்கையை ஒரு போதும் அனுமதிக்க முடியாது பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சி என்றால் இந்த வேலையை செய்திருக்க மாட்டார்கள் - என்றார். (அ)



# மல்லாகம் பெரியதம்பிரான் ஆலயத்தில் சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், பெப். 01

வரலாற்று பிரசித்தி பெற்ற மல்லாகம் பெரியதம்பிரான் ஆலயத்தில் சங்காபிஷேகம் நேற்று வெகுசிறப்பாகவும் பக்தி பூர்வமாகவும் இடம்பெற்றது.

ஆலயத்தில் இடம்பெற்ற விஷேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து பெரிதம்பிரான் பெருமானுக்கு விசேட பால் அபிசேஷகம் இடம்பற்றது.

அதனை தொடர்ந்து ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து பிரதான கும்பங்கள் தவில் நாதஸ்வரம் முழங்க உள்வீதி வளம் வந்து பெரியதம்பிரான் பெருமானுக்கு சங்காபிஷேகம் இடம்பெற்றது.

இவ் நிகழ்வில் பெருமளவிலான அடியவர்கள் கலந்து கொண்டு பெரியதம்பிரானின் அருள் கடாசத்தினை பெற்றுக் கொண்டனர். (அ)

# பியத் நிகேஷலவுக்கு பிணை

கொழும்பு, பெப். 01

கைது செய்யப்பட்டுள்ள சமூக செயற்பாட்டாளர் பியத் நிகேஷலவை பிணையில் விடுவிக்குமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

சமூக செயற்பாட்டாளர் பியத் நிகேஷல குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் கணினி குற்ற விசாரணை பிரிவினால் கைது செய்யப்பட்டார்.

பொதுமக்களின் அமைதியை சீர்குலைத்தமை, அரசாங்கத்தின் மீது பொதுமக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியமை, பொது மக்களை ஆத்திரமடையச் செய்யும் வகையிலான காணொளிகளை வெளியிட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் பியத் நிகேஷலவை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் நேற்று முன் தினம் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டதையடுத்து அவரை நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

குறித்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டதுடன், முன் வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த கொழும்பு கோட்டை பிரதான நீதவான், 5 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் அவரை விடுவிக்குமாறு உத்தரவிட்டார்.

# கடல்தொழில் அபிவிருத்திக்கு 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு



கிளிநொச்சி, பெப். 01

வடக்கு மாகாணத்தில் கடல் தொழில் அபிவிருத்திக்கு 500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கரைச்சி பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் தலைமை உரை நிகழ்த்துகையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிளிநொச்சி மாவட்டத்திற்கு இவ்வருடம் 80 மில்லியன் நிதி கிடைத்துள்ளது.

அதில் பெரும்பகுதி நிதி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மாவட்டத்துக்கு கிடைத்த இந்த நிதி போதுமானதல்ல. ஆனாலும் வடமாகாண சபை நிதியும் பெரும் தொகையில் உள்ளது.

அத்துடன் அமைச்சுக்களுக்கு ஊடாக நிதிகள் ஒதுக்கப்படும். மேலதிகமாக நிதி வழங்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்து உள்ளார்.

மேலும், கடல் தொழில் அபிவிருத்திக்காக வட மாகாணத்திற்கு 500 மில்லியன் நிதியை அமைச்சு ஊடாக ஜனாதிபதி வழங்கியுள்ளார். அந்த நிதி கடல் தொழில் அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படும்.

எனவே, இந்த ஒதுக்கீடுகளை முறையாகவும், பயனுள்ளதாகவும் பயன்படுத்த வேண்டும். அதற்கு பயனாளிகளும் இணைந்து செயற்பட வேண்டும்-என்றார்.

# இணையவழி பாதுகாப்புச் சட்டமூலம் நீதிமன்ற உத்தரவுகளை பின்பற்றியதா?

## உறுதி செய்யுமாறு சிவில் அமைப்புகள் கோரிக்கை

கொழும்பு, பெப். 01

“இணையவழி பாதுகாப்புச் சட்டமூலதிற்கு அங்கீகாரம் வழங்குவதற்கு முன்னர் அது உயர் நீதிமன்றத்தின் உத்தரவுகளை பின்பற்றியதா? என்பதை உறுதி செய்யுமாறு” ஊடகங்களும் சிவில் சமூக அமைப்புகளும் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

பாராளுமன்றத்தில் 24 ஆம் திகதி அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்ட சட்டமூலத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக, ஊடகங்கள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் ‘அடக்குமுறைச் சட்டங்களுக்கு எதிராக எழுச்சி பெறுவதற்கான தொழிற் சங்கக் கூட்டமைப்பு’ ஆகியவை இணைந்து சபாநாயகர் மஹிந்த யப்பாவிற்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே குறித்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கருத்துச் சுதந்திரத்திற்கு முற்றிலும் ஆபத்தை ஏற்படுத்தும் குறித்த இணையவழி பாதுகாப்புச் சட்டமூலத்தை நிராகரிக்க வேண்டும். குறித்த சட்டமூலத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 45 அடிப்படை உரிமை மனுக்களின் பதிவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு உயர் நீதிமன்றம் திருத்தங்கள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்கிய போதும் அதனை இணைத்துக்கொள்ளாமல் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

குறித்த சட்டமூலம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டாலும் கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமையை முடக்கும் விதிமுறைகளுக்கு எதிரான போராட்டத்தை தாம் நிறுத்தப் போவதில்லை.

மேலும் எதிர்வரும் தேர்தலில் தமக்கு எதிரான எதிர்ப்பை எதிர்கொள்ளவே இணையவழி பாதுகாப்புச் சட்டமூலத்தை அவசரமாக, சட்டமாக்க அரசாங்கம் முயற்சிக்கின்ற நிலையில் நீதிமன்றின் யோசனைகளை இணைக்காமல் அதற்கு சான்றளிக்க வேண்டும் ” என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# 10 ஆயிரம் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி

கொழும்பு, பெப். 01

மக்களின் காணி உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எண்ணக்கருவிற்கமைய, “உரித்து” வேலைத்திட்டத்தின் கீழ் 10 ஆயிரம் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

குறித்த காணி உறுதிப் பத்திரங்கள் தற்போதும் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதென சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் செயலாளர் எச்.எம்.பீ.பீ ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தின் அதிகாரிகள், மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்களுடன் நேற்று முன் தினம் தொழில்நுட்ப முறைமையினூடாக இடம்பெற்ற கலந்துரையாடலில் மேற்படி விடயம் குறிப்பிடப்பட்டது.

“உரித்து” வேலைத்திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக 10 ஆயிரம் காணி உறுதிப் பத்திரங்களை வழங்கி வைப்பதற்கான தேசிய நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் எதிர்வரும் 5ஆம் திகதி ரங்கிரி தம்புளை விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

உரித்து பத்திரங்களை பெற்றுக் கொள்வோரின் உணவு தேவைகளுக்கு அவசியமான நிதி மாவட்டச் செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோடு, அவர்கள் எவ்வித நெருக்கடியும் இன்றி நிகழ்வில் பங்கேற்பதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்குமாறு மாவட்ட செயலாளர்களுக்கு ஜனாதிபதி அலுவலகம் அறிவித்துள்ளது. (அ)

## வெற்றிப்...

பொதுஜன பெரமுனவுடன் அதிகளவான கட்சிகள் கூட்டணி அமைத்துள்ளன. அவற்றில் பல கட்சிகள் நேற்று நெலும் மாவத்தை பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் சந்தித்து கலந்துரையாடின.

பொதுஜன பெரமுன என்ற வகையில் நாங்கள் அரச நிறுவனங்களை தனியார் மயமாக்குவதற்கு எதிரானவர்கள். தொழிற்சங்கங்களுடன் பொது வளங்களை எவ்வாறு பாதுகாப்பது மற்றும் அவற்றின் செயல்திறன் மற்றும் செயல்திறனை அதிகரிப்பது குறித்து நாங்கள் கலந்துரையாடினோம்.

மேலும், எதிர்காலத்தில் மறுசீரமைக்கப்பட உள்ள நிறுவனங்கள் குறித்து விரிவான ஆய்வு நடத்தி, தனியார் மயம் அல்லது அந்நிய மயமாக்கலுக்கு ஆளாகாமல், அவற்றை திறம்பட மற்றும் திறமையாக உருவாக்குவதற்கான வழியை மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் தெரியப்படுத்துவோம்.

சுசில் பிரேமஜயந்த மற்றும் ரொஷான் ரணசிங்க ஆகியோர் தற்போது தனித்தனியாக கூட்டணி அமைத்துள்ளனர்.

மகிந்த ராஜபக்சவை பதவி விலகுமாறு முன்னர் அழுத்தம் கொடுத்தவர்கள் இவர்கள்தான். அப்போது ராஜினாமா செய்ய வேண்டும் என்று அழுத்தம் கொடுத்தவர்கள் தற்போது இரண்டாக பிரிந்து தனி கூட்டணி அமைத்து பேரணி நடத்தி வருகின்றனர்.

எங்களுடன் ஒன்றாக இருக்க முடியாதவர்கள். பிரிந்து இருக்க முடியாது.அவர்களும் வித்தியாசமான அரசியல் கருத்தை கொண்டுள்ளனர். அதை வெளிப்படுத்த வேண்டும். இருப்பினும், இது ஜனநாயகத்தின் நல்ல அம்சம். புதிய கட்சிகள் உருவாக்கப்பட வேண்டும்.

மேலும் நிமல் லான்சாவால் ஆரம்பிக்கப்பட்ட புதிய கூட்டணிக்கு எனது வாழ்த்துக்கள்.

அத்துடன், சிறீ லங்கா சுதந்திரக் கட்சி தனியான கூட்டணியை கட்டியெழுப்ப முயற்சிக்கின்றது. அந்த கூட்டணிக்கும் எனது வாழ்த்துகள். உண்மையில் சுதந்திரக் கட்சி பூச்சியத்திற்கு வீழ்ந்திருந்தது.

நாங்களும் சுதந்திரக் கட்சியில் இருந்தோம். கொள்கைப் பிரச்னையால் நாங்கள் அங்கிருந்து வெளியேறினோம், தனிப்பட்ட பிரச்னையால் அல்ல. இந்த நாட்டின் ஜனநாயகக் கட்டமைப்பில் புதிய இளைஞர் கட்சிகள் உருவாக்கப்பட வேண்டும். புதிய இளைஞர்கள் அரசியலுக்கு வர வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க சமூக ஊடக கட்டுப்பாடு தொடர்பில் கொள்கை தீர்மானம் ஒன்றை எடுத்தார். சமூக ஊடக கட்டுப்பாடு அவசியம் என்று நாங்கள் நினைக்கிறோம்.

சஜித் பிரேமதாச தனது அரசாங்கத்தின் கீழ் இந்த சமூக ஊடக கட்டுப்பாடு இல்லாதொழிக்கப்படும் என்று பிரகடனம் செய்கிறார்.

இதுவே பாரம்பரிய அரசியல் மனோநிலை. முந்தைய ஜனாதிபதி செய்த அனைத்தையும் ரத்து செய்தல். இன்று பாராளுமன்றத்தில் உள்ள பல அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இந்த பாரம்பரிய அரசியல் மனோநிலையைக் கொண்டுள்ளனர். அதற்காக நாங்கள் வருந்துகிறோம்.

பொதுஜன பெரமுன என்ற வகையில் நாம் நவீனமயப்படுத்தப்பட வேண்டும். நம் தவறுகளை ஏற்று, திருத்திக் கொண்டு முன்னேற வேண்டும். தற்போதைக்கு அரசியல் ஆதாயம் பெறுவதற்காக நாம் எமது கொள்கைகளை சந்தர்ப்பவாதமாக மாற்றவில்லை. நாங்கள் எங்கள் கருத்தில் நிற்கிறோம்.

எங்கள் கட்சியை வெற்றி பாதைக்கு கொண்டு செல்வோம். கிராமத்திற்கு செல்லும் நமது நிகழ்ச்சி வெற்றிகரமாக உள்ளது. அதன் ஊடாக மக்கள் அலைகளை உருவாக்க பொதுஜன பெரமுன செயற்பட்டு வருகின்றது-என்றார்.

(அ)

## போராட்டங்களை...

சக்தி முன்னெடுத்த பாரிய ஆர்ப்பாட்டத்தின் போது அரசாங்கம் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைப் பிரயோகத்தை மேற்கொண்டது. இதற்கு அரசாங்கம் பெருமளவு பணத்தை செலவிட்டுள்ளது.

இந்தப் பணத்தை பாடசாலைக் கல்வியை மேம்படுத்துவதற்கு ஒதுக்க முடியுமாக இருந்தால் மிகவும் பெறுமதிமிக்கதாக அமையும் என்றும் உயர் தரம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சமூக சேவை நிறுவனம் மூலம் ஊதியம் வழங்கப்படுகின்றது.

மேலும் நாட்டிலுள்ள 10ஆயிரத்து 126 பாடசாலைகளில் 41 இலட்சம் மாணவ மாணவிகள் உள்ளனர் அவர்களின் நலன்கள் தொடர்பாக அரசாங்கம் சிந்திக்கவில்லை

அத்துடன் இந்த அரசாங்கம் 365 நாட்களும் அரச மிருகத்தனத்தை பிரயோகித்து மக்களின் வாயை மூடச் செய்யும் விடயத்திலயே கெட்டித்தனம் காட்டி வருகின்றது - என்றார். (அ)

## பெப்ரவரி 04...

இலங்கையின் சுதந்திரத்திற்கு முன்னர் இருந்தே தமிழர் தேசத்தின் மீதான ஆக்கிரமிப்பென்பது சிங்கள குடியேற்றத்திட்டங்கள், இராணுவ மயமாக்கம் முதற்கொண்டு தொடங்கிய இனவழிப்புச் செயன்முறை, 2009 ஆண்டு ஈழப்போர் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழர் தாயகத்தை சூறையாடுவதில் மேலும் தீவிரநிலை கொண்டுள்ளது.

இவ்வாறானதொரு சூழலில் பெப்ரவரி 04ஆம் திகதியை கறுப்பு நாளாக பிரகடனப்படுத்தி, பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து கறுப்பு தினப் பேரணியை முன்னெடுக்க அழைப்பு விடுக்கின்றோம்.

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதோடு, தமிழர் தாயகத்தின் மீதான திட்டமிட்ட சிங்கள - பௌத்த குடியேற்றங்கள் உள்ளிட்ட ஆக்கிரமிப்புக்கள் உடனடியாக நிறுத்தப்பட்டு தமிழர் தாயகத்தின் நில ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட வேண்டும். குறிப்பாக தற்போது கையறு நிலையில் உள்ள கிழக்கு மாகாணம் மீதான ஆக்கிரமிப்புக்கள் தாமதமேதுமின்றி முடிவுக்கு கொண்டு வரப்படவும் வேண்டும்.

ஈழத்தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆள்வதற்கும் வழிநடத்துவதற்கும் சுயநிர்ணய உரிமை உடையவர்களாவர் என்பதை ஏற்று ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும். தமிழ் மக்களிற்கான அரசியல்தீர்வு தொடர்பான முயற்சிகள் யாவும் திம்புக் கோட்பாட்டினை அடியொற்றியே முன்னெடுக்கப்பட வேண்டும். இலங்கை ஒற்றையாட்சி அரசியலமைப்பிற்குட்பட்ட பதின்மூன்றாம் திருத்தத்தினை முற்றாக நிராகரிக்கின்றோம்.

தமிழர் தாயகத்தில் முடிவற்றுத் தொடரும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள், இராணுவப் பிரசன்னம், சிங்கள பௌத்தமயமாக்கம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி, தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலை போன்றவற்றிற்கான உரிய தீர்வுகள் தாமதமேதுமின்றி வழங்கப்பட வேண்டும் என்பதோடு, ஆக்கிரமிப்புகளை முன்னின்று

நடாத்தும் அரச இயந்திரத்தையும் அதன் நிறுவனங்களையும் கண்டிக்கின்றோம். தமிழர் தேசத்தின் மீது நூற்றாண்டு கடந்தும் சூழ்ந்துள்ள பேரினவாதத்தீயிலிருந்து தமிழர் தாயகத்தை காத்திடவும், தலைமுறைகள் தாண்டிய இனத்தின் இருப்பிற்காகவும் எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி, கிளிநொச்சி இரணைமடு சந்தியிலிருந்து டிப்போ சந்திவரை நடைபெறும் கரிநாள் பேரணியில் பங்குகொள்ள உணர்வுடனும் உரிமையுடனும் அழைத்து நிற்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# வை.எல்.எஸ். ஹமீட்டின் நினைவேந்தல் நிகழ்வு



அம்பாறை, பெப். 01

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஸ்தாபகச் செயலாளர் மர்ஹூம் வை.எல்.எஸ். ஹமீட்டின் 'வாழ்வும் பணியும்' நினைவேந்தல் நிகழ்வு, கடந்த சனிக்கிழமை கல்முனை, ஆஸாத் பிளாஸா மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கலந்துகொண்டு விசேட உரை நிகழ்த்தியதுடன், முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நினைவுரை ஆற்றியிருந்தார்.

மேலும், மக்கள் காங்கிரஸ் கட்சியின் தவிசாளர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி, சிரேஷ்ட பிரதித் தலைவர் சட்டத்தரணி ஷஹீட், தேசிய அமைப்பாளர் அப்துல்லாஹ் மஹ்ரூப், செயலாளர் நாயகம் எச் .சுபைர்தீன், பிரதித் தலைவர் எம்.அஸ். அனீஸ், தேசிய கொள்கைபரப்புச் செயலாளர் கே.எம்.ஏ. றஸாக் (ஜவாத்), பிரதித் தவிசாளர் எம்.ஐ. முத்து முஹம்மட், பிரதி செயலாளர் நாயகம் எம்.ஏ. அன்சில், பிரதி தேசிய அமைப்பாளர் எம்.ஏ.எம். தாஹிர், சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் மாஹிர் உள்ளிட்ட கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், அம்பாறை மாவட்ட புத்திஜீவிகள், கட்சியின் முக்கியஸ்தர்கள், வை.எல்.எஸ். ஹமீடின் குடும்பத்தினர் மற்றும் கட்சியின் ஆதவாளர்கள் என பலரும் கலந்துகொண்டு நிகழ்வினை சிறப்பித்திருந்தனர். (அ)

## போதையால்...

இந்நிலையில் வீட்டில் உள்ளவர்கள் நேற்று அதிகாலை 4 மணியளவில் அவரை அவதானித்தவேளை அவர் அசைவற்று காணப்பட்டார்.

இந்நிலையில் காலை 5 மணியளவில் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின்போது, அவர் அதிக ஹெரோயின் பாவனை காரணமாக உயிரிழந்தமை தெரியவந்துள்ளது.

இதேவேளை, அண்மைய காலமாக யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவு போதைப் பயன்பாடு காரணமாக பலரும் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மக்களைக்...

அமைச்சர் மனுஷ நாணாயக்கார தெரிவித்துள்ளார்.

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஏற்பாட்டில் நடமாடும் சேவை நிகழ்ச்சியின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று அனுராதபுரத்தில் ஆரம்பமான நிலையில் அங்கு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரண்டு வருடங்களுக்கு முந்தைய நிலைமை உங்களுக்கு நினைவிருக்கும் என நான் நம்புகின்றேன். இந்த நாட்டின் பொருளாதார வீழ்ச்சியடைந்த போது அனைவரும் பின்வாங்கியிருந்தனர்.

நாட்டை மீட்டு எடுக்கமுடியாது என தெரிவித்தனர். இந்த நாடு இன்று இருக்கும் நிலைக்கு வந்திருப்பது ஒரு அதிசயம். அனைவரும் முடியாது என தெரிவித்த சந்தர்ப்பத்தில் தற்போதைய ஜனாதிபதி நாட்டைக் கைப்பற்றினார். அவர் ஒரு தலைசிறந்த தலைவர்.

இந்த வரலாற்று சிறப்புமிக்க அனுராதபுரத்தில் இருந்து அந்த கதையை சொல்கிறேன். ரணில் விக்கிரமசிங்க கொள்கை இல்லாத, ஆனால் தீர்க்கமான முடிவுகளைக் கொண்ட தலைவர்.

நாட்டை காப்பாற்ற இதுவே கடைசி வாய்ப்பு என அனைவரும் கூறினர். ஆனால் மக்களைக் காப்பாற்றுவதற்கான கடைசி வாய்ப்பு இப்போது உள்ளது.

மக்களை காப்பாற்றக்கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்று நான் கூறுகிறேன்-என்றார். (அ)

## எரிபொருட்களின்...

குறைக்கப்பட்டுள்ளதுடன், புதிய விலை 456 ரூபா ஆகும்.

லங்கா ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை ஐந்து ரூபாயால் அதிகரிக்கப்பட்டு புதிய விலை 363 ரூபாயாக அறிவிக்கப்பட்டுள்ளது.

லங்கா சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை ஏழு ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதுடன், புதிய விலை 468 ரூபாயாகும்.

இதேவேளை, மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்று 26 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 262 ரூபாயாகும். (அ)

## தொழில்நுட்ப...

ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2019 ஆம் ஆண்டில் இந்த கட்டிட நிர்மாணத்திற்கு அடிக்கல் நடுவதற்கு பிரதமராக வந்திருந்தேன். இன்று (நேற்று) கட்டடத்தைத் திறப்பதற்கு ஜனாதிபதியாக வந்துள்ளேன். கொரோனா தொற்று பரவலால் இந்த கட்டிட நிர்மாண பணிகள் தாமதமாகியிருந்தன.

கல்வி அமைச்சருடன் கலந்துரையாடி அனைத்து பல்கலைக்கழகங்களிலும் செயற்கை நுண்ணறிவு தொடர்பிலான கற்கை நெறிகளை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளோம்.

தொழில்நுட்ப யுகம் ஒரே இடத்தில் ஸ்தம்பித்து நிற்காது. வரலாற்றில் இருந்த அணுகுமுறைகள் இன்று வேறுவிதமாக வளர்ச்சியடைந்துள்ளன.

தொழில்நுட்ப யுகத்தின் தேவைக்கேற்ப இலங்கையில் கல்வி முறையை வலுப்படுத்துவோம். அறிவு மற்றும் பண்புமிக்க சமூகத்தின் மூலமே நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும்-என்றார். (அ)

## தமிழ் அரசு...

விடயங்களை வலியுறுத்தியுள்ள சுமந்திரன் எம். பி., பொதுச் செயலாளர் உள்ளிட்ட நிர்வாக தெரிவின்போது நடந்தவற்றை விவரித்துள்ளார். அத்துடன், இப்போது தெரிவான பொதுச் செயலர் உள்ளிட்ட நிர்வாகத்துடனேயே தேசிய மாநாடு நடத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

ஈழநாடு
Eelanadu

# சுற்றுலா செல்லவேண்டுமா? இலங்கைக்கு செல்லுங்கள்!

## இந்தியர்களுக்கு ஜெய்சங்கர் ஆலோசனை



புதுடில்லி, பெப். 01

**நீங்கள் சுற்றுலா செல்லவிரும்பினால் இலங்கைக்கு செல்லுங்கள் நான் இதனை விளையாட்டாக சொல்லவில்லை என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.**

இந்தியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை கூறினார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் தனது உரையில்-

இலங்கை பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டவேளை இந்தியா வழங்கிய உதவிகளை சுட்டிக்காட்டியதுடன் இந்தியா குறித்த சாதகமான உணர்வுகளை இந்தியர்கள் மத்தியில் ஏற்படுத்துவதில் இந்த உதவிகள் முக்கிய பங்களிப்பை செய்துள்ளன எனவும் தெரிவித்தார்.

உங்களுக்கான எனது ஆலோசனை என்னவென்றால் அடுத்த முறை நீங்கள் வெளிநாடொன்றுக்கு சுற்றுலா செல்ல விரும்பினால் தயவு செய்து இலங்கைக்கு செல்லுங்கள். நான் உங்கள் அனைவருக்கும் இதனை தெரிவிக்கின்றேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் சாதாரண பொதுமக்கள் இந்தியாவை மிகவும் உயர்வாக கருதுகின்றனர்- பாராட்டுகின்றனர் என தெரிவித்த ஜெய்சங்கர், இலங்கை பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டவேளை-ஏனைய உலக நாடுகள் கைவிட்டவேளை இலங்கைக்கு கரம் கொடுத்த நாடு இந்தியா எனவும் கூறினார்.

நான் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டேன். எரிபொருள் வரிசைகளை நேரடியாக பார்த்துள்ளேன். உணவு அத்தியாவசியப் பொருட்களுக்கான பற்றாக்குறைகளை அவதானித்துள்ளேன். அவ்வேளையில் இலங்கைக்கு உதவ முன்வந்த ஒரேயொரு நாடு இந்தியா எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தியா இலங்கைக்கு 450 கோடி டொலர் பெறுமதியான உதவிகளை வழங்கியது. அவர்கள் சர்வதேச நாணய நிதியத்துடன் நீண்ட நாட்களாக பேச்சுகளை மேற்கொண்டனர். அவர்களுக்கு முதலில் உதவிகள் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்தே கிடைத்திருக்க வேண்டும். ஆனால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி 300 கோடி டொலர்களுக்கு குறைவானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியம் வழங்கியதை விட ஐம்பது சதவீதம் அதிகமாக உடனடியாக இந்தியா இலங்கைக்கு உதவிகளை வழங்கியது எனவும் அவர் கூறினார்.

(அ)

# 2,000 போதை மாத்திரைகள் யாழில் ஒருவர் சிக்கினார்



யாழ்ப்பாணம், பெப். 01

தடை செய்யப்பட்ட போதை மாத்திரைகளை விற்பனை செய்யும் நோக்குடன் அவற்றை உடைமையில் வைத்திருந்த சந்தேக நபரை பொலிஸார் கைது செய்தனர்.

அவரிடமிருந்து 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன.

யாழ்ப்பாணம் மாநகர எல்லையில் வைத்து 26 வயது நபரே இவ்வாறு கைதானார். யாழ்ப்பாணம் மாவட்ட குற்றதடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் பிறேமதிலக தலைமையிலான குழுவினர் இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர். (ஐ-03)

# கண்ணீர்ப்புகை தாக்குதலுக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல்!

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, பெப். 01

ஐக்கிய மக்கள் சக்தியினால் நேற்று முன் தினம் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியின்போது சட்டவிரோதமான முறையில் மேற்கொள்ளப்பட்ட நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை பிரயோக நடவடிக்கைக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு உடனடியாக தீர்வு வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தி ஐக்கிய மக்கள் சக்தியினரால் கொழும்பில் நேற்று முன் தினம் எதிர்ப்பு பேரணி முன்னெடுக்கப்பட்டது.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றிருந்தனர்.

முன்னதாக கொழும்பின் சில வீதிகளில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் வகையில் பேரணியை முன்னெடுப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களுக்கு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம், கோட்டை நீதிவான் நீதிமன்றம் மற்றும் மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றம் என்பனவற்றால் தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், ஐக்கிய மக்கள் சக்தியினர் தங்களது எதிர்ப்பு பேரணியை நீதிமன்ற தடை உத்தரவுக்கு உட்படாத வேறு இடங்களிலிருந்து ஆரம்பித்திருந்தனர்.

இதன்படி, வெவ்வேறு இடங்களில் ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணிகள் கொழும்பு - விஹாரமஹாதேவி பூங்காவுக்கு அருகில் ஒன்றிணைந்து மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணியாக முன்னெடுக்கப்பட்டது.

இதனால் குறித்த பகுதிகளில் கடுமையான வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தது.

இந்தநிலையில் பொலிஸாரின் தடைகளை மீறி ஆர்ப்பாட்ட பேரணி முன்னோக்கி செல்ல முற்பட்ட வேளையில் பொலிஸார் இரு வேறு சந்தர்ப்பங்களில் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் உள்ளிட்ட ஐவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் அமைச்சர்கள் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் அடங்குவதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்

# இலங்கை-மாலைதீவு இடையே விமான அம்புலன்ஸ் சேவை!

கொழும்பு, பெப். 01

இலங்கை மற்றும் மாலைதீவை இணைக்கும் விமான அம்புலன்ஸ் சேவை மார்ச் மாதம் முதல் ஆரம்பமாகவுள்ளது.

இதன்மூலம் மாலைதீவு மக்களுக்கு விரைவான மருத்துவ சேவையை பெற்றுக்கொள்ளலாம்.

மாலைதீவின் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் கப்டன் மொஹமட் அமீன் மற்றும் இலங்கையின் துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ஆகியோருக்கு இடையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சந்திப்பில் இருந்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# இழுவைமடி வலை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டோர் கைது

மன்னார், பெப். 01

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல் தீவு கடற்கரையில் தடை செய்யப்பட்ட இழுவை மடியை பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபட்ட 5 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு அவர்கள் பயன்படுத்திய இழுவைப் படகும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் எருக்கலம்பிட்டி மற்றும் உப்புக்குளம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரிய வந்துள்ளது.

விடத்தல் தீவு மக்கள் மற்றும் கடற்றொழில் திணைக்கள உத்தியோகத்தர்களால் திங்கட்கிழமை இரவு கைது குறித்த மீனவர்கள் கடலில் வைத்து பிடிக்கப்பட்டனர்.

இந்நிலையில் விடத்தல் தீவு இறங்குதுறையில் இழுவைப் படகு நிறுத்தப்பட்டுள்ளதோடு, மேலதிக நடவடிக்கைக்காக 5 மீனவர்களும் வலைகளுடன் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

# இலஞ்சம் வாங்கிய குற்றம் கைதான அதிகாரிக்கு மறியல்

கொழும்பு, பெப். 01

பத்தாயிரம் ரூபாவை இலஞ் சம் பெற்றார் என்ற குற்றச்சாட் டில் கைது செய்யப்பட்ட தொழில் திணைக்கள அதிகாரி ஒருவரை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் பிரசன்ன அல் விஸ் நேற்று புதன்கிழமை உத்தரவிட்டார்.

கடந்த 19ஆம் திகதி இலஞ்ச ஊழல் விசாரணை அதிகாரிக ளால் கைது செய்யப்பட்ட மருதமுனையைச் சேர்ந்த சந் தேக நபரே விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

ஹோட்டல் ஒன்றின் உரி மையாளர், ஊழியர் நலன்புரி நிதியை செலுத்தாமை தொடர் பான சட்டத்தை அமுல்படுத்து வதை தவிர்ப்பதற்காகவே அம் பாறை தொழில் திணைக்களத் தில் பணிபுரியும் சந்தேக நப ரான இந்த அதிகாரி இலஞ்சப் பணத்தை பெற்றுள்ளதாக விசா ரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# தும்பளை புனித லூர்து அன்னையின் யாத்திரை திருத்தல விழா ஆரம்பம்

வடமராட்சி, பெப். 01

பருத்தித்துறை, தும்பளை புனித லூர்து அன்னையின் யாத்திரைத் திருத்தல திருவிழா நாளை வெள்ளிக்கிழமை பருத்தித்துறை பங்குத் தந்தையும் மறைக்கோட்ட முதல்வரும் திருத்தல பரிபாலகருமாகிய அருட்பணி ஏ. எவ். பெனற் அடிகளாரின் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தினமும் மாலை 4.30 மணிக்குச் திருச்செபமாலையுடன் நவநாள் வழிபாடுகள் நடைபெறும்.

10ஆம் திகதி சனிக்கிழமை வழிபாட்டில் திவ்விய நற்கருணை விழாத் திருப்பலியும், ஆராதனையும் பவனியும் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணியாளர் பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் இடம்பெறும்.

11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்கும், 7.00 மணிக்கும் திருவிழாத் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும். 7.00 மணிக்கு நடைபெறும் திருவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரட்திரு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமை தாங்கி ஒப்புக்கொடுப்பார்.

திருப்பலியின் நிறைவில் புனித லூர்து அன்னையின் திருச்சொருபப் பவனியும் ஆசீரும் இடம்பெறும் என்று திருத்தல பரிபாலகர் தெரிவித்துள்ளார்.

(ஐ-02)

# அரச நிறுவனங்களில் பிரச்னைகளுக்கு தீர்வு!

கொழும்பு, பெப். 01

அரச நிறுவனங்களுக்கி டையே ஏற்படுகின்ற பிரச்னைகளை தீர்ப்பதற்காக சட்ட ரீதியான ஏற்பாடுகளை அறிமுகம் செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரச நிறுவனங்களுக்கிடையே மேலெழுகின்ற பிணக்குகளைத் துரிதமாகத் தீர்ப்பதற்கு இயலுமாகும் வகையில் பொருத்தமான ஏற்பாடுகளை அறிமுகம் செய்வதன் தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்டமா அதிபரிடம் வினவி அதற்கான சட்டமூலத்தை தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# காசாவில் இனப்படுகொலை: இஸ்ரேலுக்கு எதிரான போர் வழக்கில் சர்வதேச நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு!

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

இஸ்ரேலுக்கு எதிரான இனப்படு கொலை குற்றச்சாட்டுக்கு போதுமான ஆதாரங்கள் இருப்பதாகவும் எனவே இதனை சர்வதேச நீதிமன்றம் விசாரிக்க முடியும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசா இனப்படுகொலையில் இஸ்ரேலுக்கு எதிரான போர் வழக்கில் சர்வதேச நீதிமன்றம் பரபரப்பான உத்தரவினை வழங்கியுள்ளது.

காசா பகுதியில் இஸ்ரேல் தொடர்ச்சியாகத் தாக்குதல் நடத்தி வரும் நிலையில், இது குறித்து சர்வதேச நீதிமன்றம் சில முக்கிய உத்தரவைப் பிறப்பித்துள்ளது. இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே கடந்த சில மாதங்களாகவே போர் நடந்து வருகிறது.

காசாவில் உள்ள பாலஸ்தீனர்களை குறிவைத்து இஸ்ரேல் இனப்படுகொலையில் ஈடுபட்டுள்ளதாகவும் விமர்சனங்கள் தற்போது எழுந்துள்ளன. இது தொடர்பான வழக்கில் சர்வதேச நீதிமன்றம் இப்போது முக்கியமான தீர்ப்பைக் கொடுத்துள்ளது.

இதற்கிடையே காசா பகுதியில் இஸ்ரேல் நடத்தும் தாக்குதலில் ஏற்படும் உயிரிழப்புகள் மற்றும் பாதிப்புகளைக் கட்டுப்படுத்த சர்வதேச நீதிமன்றம் இஸ்ரேலைக் கேட்டுக் கொண்டது.

அதேநேரம் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான போர் தொடரும் நிலையில், காசாவில் போர்நிறுத்தத்திற்கு உத்தரவிடச் சர்வதேச நீதிமன்றம் மறுத்துவிட்டது.

காசா பகுதியில் ராணுவ நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு தென்னாப்பிரிக்கா கோரிக்கை விடுத்து இருந்த நிலையில், சர்வதேச நீதிமன்றம் இவ்வாறு தீர்ப்பளித்துள்ளது. சர்வதேச நீதிமன்றம் தனது உத்தரவில், இஸ்ரேல் தனது வீரர்கள் இனப்படுகொலை செய்யாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் காசாவில் மனிதாபிமான நிலைமையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறியுள்ளது.

இது குறித்து சர்வதேச நீதிமன்றம் தனது தீர்ப்பில், “அங்கிருந்து வரும் தகவல்கள் கவலை தருவதாக இருக்கிறது. அங்கு நிலவும் சூழல் மோசமாக இருக்கிறது. தொடர்ச்சியாக உயிரிழப்பு குறித்த தகவல்கள் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்துகிறது. மேலும், அங்கு மனிதாபிமான அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று கூறியுள்ளது.




இந்த உத்தரவை நிறைவேற்ற இஸ்ரேல் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து ஒரு மாத காலத்திற்குள் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் சர்வதேச நீதிமன்றம் இஸ்ரேலைக் கேட்டுக் கொண்டது.

ஆயினும் சர்வதேச நீதிமன்றம் அப்படி உத்தரவிட்டாலும் கூட சர்வதேச நீதிமன்றத்திற்குத் தனது தீர்ப்பை அமுல்படுத்த எந்தவொரு அதிகாரமும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**இஸ்ரேல் நிராகரிப்பு :**

இந்த குற்றச்சாட்டு உத்தரவுக்குப் பதிலளித்த இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, இனப்படுகொலை வழக்கை “அட்டூழியமானது” என்றும், தன்னை தற்காத்துக் கொள்ள “தேவையானதை” இஸ்ரேல் தொடர்ந்து செய்யும் என்றும் கூறியுள்ளார்.

முன்னதாக கடந்த ஜனவரி மாதம் நீதிமன்றத்தில் நடந்த விசாரணையில், காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் இனப்படுகொலை ஒப்பந்தத்தை மீறுவதாகத் தென்னாப்பிரிக்கா குற்றம் சாட்டியது.



கடந்த அக். 7ஆம் தேதி ஹமாஸ் இஸ்ரேல் மீது தாக்குதலை நடத்திய போதிலும், அதற்கு முன்பே இஸ்ரேல் பாலஸ்தீனத்தில் ராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்ததைத் தென்னாப்பிரிக்கா தனது வாதத்தில் குறிப்பிட்டது.

இருப்பினும், இனப்படுகொலை குற்றச்சாட்டை நிராகரித்த இஸ்ரேல், இந்த வழக்குகளை ரத்து செய்யுமாறு சர்வதேச நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்திருந்தது.

இந்தச் சூழலில் தான் சர்வதேச நீதிமன்றம் இப்படியொரு தீர்ப்பை வழங்கியுள்ளது. இந்த தீர்ப்பை இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு விமர்சித்துள்ளார்.

இஸ்ரேல் ராணுவம் மற்றும் காசாவின் ஹமாஸ் அமைப்பினர் இடையேயான போர், மாதக்கணக்கில் நீடித்து வருகிறது. காசாவில் இனப்படுகொலையைத் தடுக்க இஸ்ரேல் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தப் போரில் பல்லாயிரக்கணக்கான பாலஸ்தீன மக்களைக் கொன்று இஸ்ரேல் இனப்படுகொலையை நடத்தியுள்ளதாக, சர்வதேச நீதிமன்றத்தில் தென் ஆப்பிரிக்கா தரப்பில் வழக்கு தொடரப்பட்டது. இதனை விசாரித்த 17 நீதிபதிகள் அடங்கிய சர்வதேச நீதிமன்ற அமர்வு இடைக்கால தீர்ப்பு வழங்கியது.

**போதுமான ஆதாரங்கள் உள்ளது:**

காசாவுக்கான மனிதாபிமான உதவிகளை இஸ்ரேல் தடுக்கக்கூடாது எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பாலஸ்தீனத்தில் பொதுமக்களுக்கு தேவையான மனிதாபிமான உதவிகள் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் காசாவில் இனப்படுகொலையைத் தடுக்க இஸ்ரேல் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இனப்படுகொலை குற்றச்சாட்டுக்கு போதுமான ஆதாரங்கள் இருப்பதாகவும் எனவே இதனை சர்வதேச நீதிமன்றம் விசாரிக்க முடியும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(16ம் பக்கம் பார்க்க)





# வடக்கிலும் தெற்கிலும் தேசியவாதங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்



கலாநிதி ஜெகான் பெரேரா

இலங்கை தமிழரசு கட்சியின் தலைவராக யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவானமை மீண்டும் தமிழ்த் தேசியவாதத்தை முன்னரங்கத்துக்கு கொண்டுவரும் சாத்தியத்தைக் கொண்டிருக்கிறது.

பெரிய தமிழ்க்கட்சியான தமிழரசு கட்சி பல தமிழ்க் கட்சிகளின் அணியான தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதான கட்சியாக விளங்கியது. விடுதலை புலிகளின் காலத்தின் கடைசிக்கட்டத்தில் அவர்களின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட அந்த கூட்டமைப்பு இப்போது சிதைந்துவிட்டது.

தமிழரசு கட்சியின் புதிய தலைவர் அதிகப் பெரும்பான்மை வாக்குகள் வித்தியாசத்தில் தேர்தலில் வெற்றி பெறவில்லை .தேசிய அரசியல் நீரோட்டத்தில் பெரும் பங்கு வகித்த அவரது போட்டியாளர் 43 சதவீதத்துக்கும் நெருக்கமான வாக்குகளைப் பெற்றிருக்கிறார்.

பேச்சுவார்த்தை மற்றும் விட்டுக்கொடுப்பை அடிப்படையாகக் கொண்ட பாதை நிராகரிக்கப்படக்கூடாது என்ற விளக்கப்பாடு தமிழ்ச் சமூகத்திற்குள் இருப்பதை இது வெளிக்காட்டுகிறது.

விட்டுக்கொடுப்பற்ற பாதையில் சென்று தனித்தமிழ் நாடு என்ற குறிக்கோளில் இறுக்கமான பிடிவாதமாக இருந்த விடுதலை புலிகள் கண்ட முற்றுமுழுதான இராணுவத் தோல்வி அந்தப் பாதை மீண்டும் பின்பற்றக்கூடியது அல்ல என்ற புரிதலை பலருக்கு ஏற்படுத்தியது.

புதிதாக தெரிவு செய்யப்பட்ட தமிழரசு கட்சியின் தலைவரின் ஆரம்ப அறிவிப்புகள் தமிழ்த் தேசியவாதத்தின் அடிப்படையிலான ஒரு கடும் நிலைப்பாட்டை அவர் கொண்டிருப்பதை உணர்த்துகின்றன.

விடுதலை புலிகளின் தோற்றத்துக்கு முன்னரே இருந்து வந்த தமிழ்த் தேசியவாதம் அவர்களின் மறைவுக்கு பின்னரும் தொடருகிறது. அந்த தேசியவாதம் நிச்சயமாக ஒரு தனியான அரசாக அமையவேண்டும் என்றில்லை, சமஷ்டி முறை மற்றும் வேறுவகையான அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகளுக்கு இசைவானதாகவும் இருக்கமுடியும்.

விடுதலை புலிகள் இயக்கப் போராளிகளின் மயானத்துக்கு சென்று மரியாதை செலுத்தியதே தலைவர் தேர்தலில் வெற்றிபெற்ற உடனடியாக சிறிதரன் செய்த முதல் காரியமாகும்.

பிறகு அவர் வழங்கிய நேர்காணலில் 'விடுதலை புலிகளைப் பற்றி எம்மில் சிலருக்கு வேறுபட்ட அபிப்பிராயங்கள் அல்லது தவறான விளக்கப்பாடு இருக்கலாம். ஆனால் கட்சியின் பொதுச்சபை உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள், ஏறத்தாழ 184 பேர் எனக்கு வாக்களித்திருக்கிறார்கள். அவர்கள் எனது கோட்பாட்டை ஆதரிக்கிறார்கள் என்பதே அதன் அர்த்தம். வேறு வார்த்தைகளில் கூறுவதானால் கட்சியின் பெரிய பலமே தமிழ்த் தேசியவாதம்தான். மறைந்த ஈழ தேசிய விடுதலை போராளிகளின் கல்லறைகளில் இருந்தே அது தொடங்கவேண்டும் என்பதை அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள்" என்று கூறினார்.

தேர்தலுக்கு பிறகு நிகழ்த்திய உரைகளில் சிறிதரன் எதிர்காலத்துக்கான தனது நோக்கு வட மாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைந்த அலகின் அடிப்படையிலான சமஷ்டி முறையே என்று கூறனார். அத்துடன் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தம் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு போதுமானதல்ல என்ற நிலைப்பாட்டைக் கொண்டவராகவும் அவர் இருக்கிறார்.

இந்த உணர்வுகள் சிங்களப் பெரும்பான்மையினத்தவர்களுடன் முரண்பாட்டை தோற்றுவிக்கக்கூடிய சாத்தியத்தைக் கொண்டிருக்கின்ற போதிலும் தமிழரசு கட்சியின் தலைவரின் நோக்கு மீது தமிழ் அரசியல் சமுதாயத்திற்குள் ஒரு கவர்ந்திழுப்பு இருக்கிறது.

தற்போதைய தலைமைத்துவம் உட்பட இலங்கை அரசினாலும் அதன் அரசியல் தலைவர்களினாலும் தாங்கள் அலட்சியப்படுத்தப்பட்டு ஒடுக்கப்படுவதாக தமிழ் மக்கள் மத்தியின் கடுமையான வேதனை உணர்வு இருக்கிறது.

அறகலய மக்கள் கிளர்ச்சியை அடுத்து எதிர்பாராத விதமாக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக அதிகாரத்துக்கு வந்தமை மாற்றத்துக்கான நம்பிக்கையை ஏற்படுத்தியது.

அரசியலில் இனவாதத்தை ஒருபோதும் பேசாத ஒரு அரசியல் தலைவர் என்ற வகையில் விக்கிரமசிங்க இலங்கையின் 75 வது சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப்பிரச்னைக்கு அரசியல் இணக்கத் தீர்வான்றைக் காணப்போவதாக செய்த அறிவிப்பு சாதகமான முறையில் நோக்கப்பட்டது. குறைந்த பட்சம் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்து ஜனாதிபதி செய்த அறிவிப்பு அக்கறையுடனானதாக தோன்றியது.



### ஆட்சிமுறைப் பங்குதாரர்கள்

13 வது திருத்தம் மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்கம் செய்வதில் இலங்கை அரசு செல்லக்கூடிய தூரத்தைப் பிரதிபலித்தது. இலங்கை அரசாங்க தலைவர்கள் நம்பிக்கை கொண்டிருந்த காரணத்தினால் அல்ல அந்த நேரத்தில் இந்தியா பிரயோகித்த கடுமையான நெருக்குதலே மாகாணசபைகள் உருவாக வழிவகுத்தது.

இந்தியாவைப் போலன்றி இலங்கையில் மாகாணசபை முறை அதன் முழுமையான ஆற்றலையும் எட்டவில்லை. இந்தியாவில் இதே முறை பெரியளவில் வெற்றிபெற்று வேற்றுமையில் ஒற்றுமைகொண்ட பெரிய பொருளாதார வல்லரசாக உலகில் அந்த நாட்டை விளங்க வைத்திருக்கிறது.

பொருளாதார செயற்திறனின் அடிப்படையிலேயே 13 வது திருத்தத்தை நியாயப்படுத்தவேண்டும் என்ற ஒரு பொதுவான தப்பபிப்பிராயம் இருக்கிறது. அதனால் மத்திய அரசாங்கத்திற்குள் இருக்கும் முன்னரங்க அதிகாரிகளுக்கு அதிகாரம் பன்முகப்படுத்தப்பட வேண்டும் அல்லது பிரதேச சபை, நகரசபை மற்றும் மாநகரசபை போன்ற சிறிய உள்ளூராட்சி சபைகளுக்கு அதிகாரம் பன்முகப்படுத்தப்படவேண்டும் என்று வாதிடப்படுகிறது. எவ்வாறெனினும் பொருளாதார செயற்திறனின்மையின் அடிப்படையில் மாகாணசபை முறையை இல்லாமல் செய்வதற்கான முயற்சி நியாயமான அடிப்படையைக் கொண்டதல்ல.

"2023 ஆம் ஆண்டில் சகல மாகாணசபைகளுக்குமான மொத்த மீண்டுவரும் செலவினத் தேவை 485.25 பில்லியன் ரூபாவாக இருந்ததாகவும் 391.75 பில்லியன் ரூபா வழங்கப்பட்டதாகவும் ஓய்வுபெற்ற அரசாங்க அதிகாரியும் ஜனாதிபதியினதும் பாதுகாப்பு அமைச்சினதும் முன்னாள் செயலாளருமான ஒஸ்ரின் பெர்னாண்டோ எழுதியிருக்கிறார்.

மொத்த மூலதனச் செலவினத்தேவை 167 பில்லி யன் ரூபாவாக இருந்த வேளை 37 பில்லியன் ரூபா வழங்கப்பட்டது. மாகாணசபைகளின் மொத்த மூலதனச் செலவினத்தேவையில் 22.1 சதவீதத்தை உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கினால் அவற்றை பொருளாதார ரீதியில் செயற்திறன் மிக்கவையாக மாற்றமுடியும் என்று கூறுவது அபத்தமாகும் என்று பெர்னாண்டா கூறியிருக்கிறார்.

இது இலங்கையில் அதிகாரம் ஏன் பரவலாக்கப்படவேண்டியிருக்கிறது என்ற அடிப்படைக் காரணத்தை வெளிச்சம் போட்டுக்காட்டுகிறது. அதிகாரப் பரவலாக்கம் இல்லாத நிலையில் இன,மத சிறுபான்மைச் சமூகங்கள் நாட்டின் சகல பாகங்களிலும் பெரும்பான்மை இனத்தவர்களின் தயவில் வாழ்கிறார்கள்.

நிதிப் பரவலாக்கத்தை உள்ளடக்கியதாக அதிகாரம் பரவலாக்கம் செய்யப்பட்டால் தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மைச் சமூகங்கள் தாங்கள் வசிக்கின்ற பகுதிகளில் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரத்தைக் கொண்டிருப்பர். அவர்கள் நாட்டின் ஆட்சிமுறையில் பங்குதாரர்களாகவும் மாறுவார்கள்.

கடந்த ஐந்து வருடங்களுக்கும் அதிகமான காலமாக முழு மாகாணசபை முறையும் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருப்பது தற்போதைய தருணத்தின் மிகவும் துரதிர்ஷ்டவசமான ஒரு அம்சமாகும்.

அரசியலமைப்புக்கு முரணாக 13 வது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்துவருவதற்கு அப்பால் அந்த திருத்தம் சட்டத்தில் இருக்கிறது என்பதை தவிர இன்று நடைமுறைப்படுத்தப்படுவதாக இல்லை.

மாகாணசபை தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டிருப்பதால் 13 வது திருத்தம் மாகாணசபைகளின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. இன, மத சிறுபான்மைச் சமூகங்களுக்கான அதிகாரப்பரவலாக்கத்துடன் எந்த விதத்திலும் சம்பந்தப்படாத குறுகியதும் பக்கச் சார்பான அரசியல் நலன்களே இதற்கு காரணமாகும்.

2018 ஆம் ஆண்டில் பதவியில் இருந்த அரசாங்கம் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்று உணர்ந்ததால் எந்தவொரு தேர்தலையும் நடத்தாமல் இருக்கத் தீர்மானித்தது. தேர்தல்கள் நடத்தப்பட்டிருந்தால் மக்களின் ஜனநாயக ஆணையைத் தக்க வைப்பதில் அரசாங்கத்துக்கு இருந்த பலவீனம் அம்பலத்துக்கு வந்திருக்கும்.

அதேபோன்ற சூழ்நிலை தற்போதும் நிலவுகிறது. தற்போதைய அரசாங்கம் உள்ளூராட்சி தேர்தல்களை காலவரையறையின்றி ஒத்திவைக்கும் அளவுக்கு சென்றது.

### நம்பிக்கை தரும் அறிகுறிகள்

இத்தகைய சூழ்நிலைகளின் கீழ், புதிதாக தெரிவு செய்யப்பட்ட இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் 13 வது திருத்தத்தை விடுத்து அதற்கு பதிலாக சமஷ்டி முறையின் அடிப்படையிலான தீர்வொன்றைக் கோரியிருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை.

ஆனால் தற்போதைய அரசாங்கம் மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கு தவறியதன் காரணத்தினால் மாத்திரம் தமிழ்த்தேசியவாதம் எழுச்சிபெற்றதாக கூறிவிடமுடியாது. ஆட்கள் காணாமல் போனமை, மனித உரிமைகளுக்கு விரோதமான பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்கள் சம்பந்தப்பட்ட பிரச்னை மற்றும் அபகரிக்கப்பட்ட நிலங்கள் அவற்றுக்கு உரித்துடைய தமிழ் மக்களுக்கு திருப்பிக் கையளிக்கப்படாமல் இருப்பது போன்ற மிகவும் உணர்ச்சிபூர்வமான விவகாரங்களை உரிய முறையில் அரசாங்கம் கையாளத்தவறியதும் அந்த எழுச்சிக்கு காரணமாகும்.

கிழக்கு மாகாணத்தில் பாரம்பரியமாக தமிழ்மக்கள் விவசாயம் செய்துவந்த நிலத்துக்கான அவர்களின் உரிமையைப் பாதுகாக்கவும் அரசாங்கம் தவறியிருக்கிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலத்தமடு - மாதவனையில் கால்நடை வளர்ப்பாளர்களின் பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதாகவும் நிலம் உரித்துடையவர்களுக்கு திரும்பக்கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்றும் ஜனாதிபதி பகிரங்கமாகவும் தனிப்பட்ட முறையிலும் உறுதிமொழிகளை வழங்கியபோதிலும், எதுவும் நடைபெறவில்லை.

ஆக்கிரமித்திருக்கும் நிலத்தில் இருந்து வெளியேறி சிங்கள விவசாயிகள் தங்கள் சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்லவேண்டும் என்று மாஜிஸ்திரேட் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் உட்பட நீதித்துறை தீர்ப்புக்களை வழங்கியபோதிலும் கூட எதுவும் நடைபெறவில்லை.

இத்தகைய நம்பிக்கை இல்லாத ஒரு சூழ்நிலையிலேயே சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்கும் சவால்கள் தோன்றுகின்றன. இதைக் கையாளுவதற்கு அனுபவமும் விவேகமும் நிறைந்த அரசியல் தலைமைத்துவம் தேவை. ஆனால் அதற்கான நம்பிக்கை தரும் அறிகுறிகள் தென்படுகின்றன.

நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைப் பற்றி கவலைப்படாமல் தேர்தல்களில் வெற்றி பெற வாக்குகளைப் பெறும் நோக்குடன் தேசியவாதம் பயன்படுத்தப்படுகிறது என்ற பரந்தளவு விழிப்புணர்வு சிங்கள சனத்தொகையில் அரசியல் அக்கறையுடைய பிரிவுகள் மத்தியில் ஏற்பட்டிருப்பது அந்த அறிகுறிகளில் ஒன்று.

இலங்கையின் மிகுந்த தேசியவாத உணர்வுடைய அரசாங்க தலைவர்கள் குழுவொன்றின் ஆட்சிக்காலத்தில் சர்வதேச பொருளாதார வங்குரோத்து நிலை ஏற்பட்டது ஒன்றும் தற்செயலானது அல்ல.

அறகலய போராட்ட இயக்கத்தில் பங்கேற்ற பல்கலைக்கழக மாணவர்களும் இளைஞர்களும் இதை தெளிவாக விளங்கிக் கொண்டார்கள். அந்தப் போராட்டத்தில் அவர்கள் எழுப்பிய சுலோகங்கள் தாங்கள் மீண்டும் ஏமாறப்போவதில்லை என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தார்கள் என்பதை வெளிப்படுத்தியது.

பொருளாதார வீழ்ச்சிக்கு பிறகு கடந்த இரு வருடங்களுக்கும் மேலாக சிங்கள பெரும்பான்மையினர் மத்தியில் குறுகிய இன அடிப்படையிலான தேசியவாதம் வீழ்ச்சி கண்டுவருகிறது என்பதற்கான உற்சாகம் தரும் அறிகுறிகள் இருக்கின்றன.

(16ம் பக்கம் பார்க்க)

# காசாவில் இனப்படுகொலை:




(14ம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், ராணுவ நடவடிக்கையை நிறுத்த வேண்டும் எனவும், போர் நிறுத்தத்தை ஏற்படுத்த வேண்டும் எனவும் தென்ஆப்பிரிக்கா விடுத்த கோரிக்கை குறித்து நீதிபதிகள் எதுவும் தெரிவிக்கவில்லை. இந்நிலையில், இனப்படுகொலை குற்றச்சாட்டு தவறானது என தெரிவித்துள்ள இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, தங்களது தரப்பு நியாயத்தை ஏற்க மறுத்துள்ளதாக குற்றம்சாட்டியுள்ளார்.

காசாவில் பாலஸ்தீனியர்களுக்கு எதிரான இனப்படுகொலை நடவடிக்கைகளைத் தடுக்கவும், பொதுமக்களுக்கு மேலும் பல உதவிகளைச் செய்யவும் இஸ்ரேலுக்கு ஐநாவின் சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டது.

**ஐநாவின் சர்வதேச நீதிமன்றம் (ICJ) உத்தரவு:**

பாலஸ்தீன பிரதேசத்தில் ஹமாஸ் போராளிகளுக்கு எதிரான போரில் அரசு தலைமையிலான இனப்படுகொலை நடந்ததாக கூறப்படும் நிலையில், இஸ்ரேலுக்கு எதிரான தற்காலிக நடவடிக்கைகளுக்கான தென்னாப்பிரிக்காவின் கோரிக்கைகளுக்கு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

எனினும் தென்னாப்பிரிக்கா கோரியபடி போர்நிறுத்தத்தை நிறுத்த தெரிவிக்காமல் மேலோட்டமாக தெரிவித்தது.

பிராந்தியத்தில் வெளிவரும் மனித அவலத்தின் அளவை நீதிமன்றம் நன்கு அறிந்திருக்கிறது. தொடர்ச்சியான உயிர் இழப்புகள் மற்றும் மனித துன்பங்கள் குறித்து ஆழ்ந்த கவலையில் உள்ளது என்று நீதிமன்றத்தின் தீர்ப்பைப் படித்த நீதிமன்றத் தலைவர் ஜோன் டோனோக் கூறியுள்ளார்.

சர்வதேச நீதிமன்றத்தின் பார்வையில், தென்னாப்பிரிக்காவால் முன்வைக்கப்பட்ட காசாவில் இஸ்ரேலின் சில நடவடிக்கைகள் ஐநாவின் இனப்படுகொலை மாநாட்டின் விதிகளுக்குள் அடங்கும் என்று நீதிபதி கூறினார்.

வழக்கை பொது பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் என்ற இஸ்ரேலின் கோரிக்கையை நீதிமன்றம் ஏற்க முடியாது என்று நீதிமன்றத் தலைவர் ஜோன் டோனோக் கூறினார்.

காசாவில் இஸ்ரேல் தனது இராணுவ நடவடிக்கைகளை இடைநிறுத்த கட்டாயப்படுத்தும் உத்தரவு உட்பட ஒன்பது நடவடிக்கைகளில் தீர்ப்பளிக்க ஹேக் அடிப்படை நீதிமன்றம் முதலில்கேட்கப்பட்டது.

**நடைமுறைப்படுத்த எந்த வழிமுறையும் இல்லை:**

பாலஸ்தீன பகுதியில் இஸ்ரேல் இனப்படுகொலை செய்கிறதா என்ற தென்னாப்பிரிக்காவின் முக்கிய குற்றச்சாட்டை இந்த தீர்ப்பு கையாளவில்லை. மாறாக, தென்னாப்பிரிக்காவால் கோரப்பட்ட நடவடிக்கைகள் இனப்படுகொலையின் கீழ் பாலஸ்தீன மக்களின் உரிமைகளுக்கு தீங்கு விளைவிப்பதில் இருந்து பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டது.

தென்னாப்பிரிக்காவால் கோரப்பட்ட தற்காலிக நடவடிக்கைகள், முக்கிய வழக்கின் இறுதித் தீர்ப்புக்கு முன் வைக்கப்பட வேண்டிய கோரிக்கைகளாகும், அதற்கு பல ஆண்டுகள் ஆகலாம்.

சர்வதேச நீதிமன்றம் ICJ இன் தீர்ப்புகள் அனைத்து தரப்பினரையும் கட்டுப்படுத்தும் அதே வேளையில், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு எந்த வழிமுறையும் இல்லை என்பதே உண்மையாகும். ●

# வடக்கிலும் தெற்கிலும்

(15ம் பக்கத் தொடர்ச்சி)

இனமோதல், இராணுவமயமாக்கல், தண்டனையின்மை, ஊழல் ஆகியவற்றுக்கும் பொருளாதார மற்றும் சமூக வீழ்ச்சிக்கும் இடையில் இருக்கும் தொடர்பை இப்போது மக்களால் பெருமளவுக்கு விளங்கிக்கொள்ள முடிகிறது. வளர்ந்துவரும் இந்த உணர்வு செல்வாக்கு மிக்க பௌத்த மதகுருமார் மத்தியில் சமாதான இயக்கத்துக்கான ஆதரவுவளர வழிவகுத்திருக்கிறது.

முன்னணி பௌத்த பிக்குமார் குழுவொன்று புலம்பெயர் தமிழ்ச்சமூகத்தின் ஒரு பிரிவினருடன் சேர்ந்து முன்னெடுத்த முயற்சி இமாலயப் பிரகடனத்துக்கு வழிவகுத்தது. அந்த பிரகடனத்தை இரு தரப்பினரும் இணைந்து தயாரித்தார்கள்.

இந்த முயற்சியில் சம்பந்தப்பட்ட பௌத்த பிக்குகளில் இருவரான வண. பேராசிரியர் பள்ளேகந்த ரத்னசாரவும் வண. கலாநிதி மாதம்பகம அஸ்ஸஜியும் புதுடில்லியில் நடைபெற்ற சர்வதேச பௌத்த மகாநாட்டில் தலைமைப் பதவிகளைப் பெற்றமைக்காக அண்மையில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

அவர்கள் நிகழ்த்திய உரைகளில் தங்களது சமாதான முயற்சிக்கு பௌத்த மகாநாயக்கர்களின் ஆதரவு இருப்பதை உறுதிப்படுத்தினர்.

சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்கும் திறக்கும் இந்த வாய்ப்புக்கள் ஊழலையும் அதிகார துஷ்பிரயோகத்தையும் ஒழித்துக்கட்டி சகலருக்கும் நல்வாழ்வைத் தரக்கூடிய மார்க்கத்தில் ஐக்கியப்படுத்தப்போகும் அனுபவமும் விவேகமும் கொண்ட அரசியல் தலைவர்களினால் அவதானிக்கப்படும். ●

